# புராணபோதை

## மு. கருணாநிதி





227
D04

# புராணப்போதை

கலைஞர்

## மு. கருணாநிதி

விற்பனை உரிமை:-

கலைமன்றம்
சென்னை-1

முதற் பதிப்பு: பிப்ரவரி 1953
உரிமை பெற்றது

விலை ரூ. 1—0—0
அட்டை பைண்ட் ரூ. 1—8—0

வெளியீடு:-
முன்னேற்றப் பண்ணை,
சென்னை.

# போதை! மேதை!

**போதை!** புராணப் போதை மனிதரை, மனித வாழ்வி லிருந்து எவ்வளவு தூரம் மாற்றி எங்கெங் கெல்லாமோ, இழுத்துச் செல்கிறது!

மனிதன், மலந்தின்னும் வராகத்தையும், பிணந் தின்னும் பறவை யினங்களையும், இன்னும் எதையெதையோ, தன் வாழ்வும் தாழ்வும் கருதாது, பலன், பயன் எதையுமே எண்ணிடாது, கண் மூடித்தனமாக வணங்குகிருன்! கண் கண்ட தெய்வமே, கடாட்சித்தருள், கர்மத்தைப் போக்கு, கதியளி என்று ஏற்றியேற்றிப் போற்றுகிருன்!

இந்த இழிநிலைக்குக் காரணமென்ன? மனிதன் தன்னை, தன்னிடமுள்ள பகுத்தறிவைவிட்டு, தன்னிலும் தாழ் வான, கீழான மிருகங்களையும், அதையும்விட மனிதரையே கடவுள் என்றும் மகான் வழிகாட்டி யென்றும் கொண்டி டும் போக்கு எதனுல் ஏற்பட்டது? எந்த சூழ் நிலையால்?

மனிதனது சிந்தனைச் சிக்கல் மனிதனை மயங்கிடும் நிலைக்குக் கொண்டு சென்றிடும் நேரத்தில், சில சுயநலமி கள் ஆனுல் சூட்சுமந் தெரிந்தோர் சூதுவாதுடன் இழைந்து குழைந்து பழகிப் பாகவதம், புராணம் என்பன போன்ற வற்றைச் சந்தர்ப்பந் தெரிந்து பாடினர், படித்துக் காட்டி னர், பரப்பினர்!

புராணத்தில் கூறப்படும் நிகழ்ச்சிகள், சத்காரியங் கள், கடவுட் கைங்கர்யங்கள் மனிதனது சிந்தனைக்குத்

தளை போட்டு, மயக்கி, சுய நினைவற்றவ னாக்கிப் போதை கொண்டிடச் செய்கின்றன!

போதை யேற்றும் புராணங்களைப் பாடினோர், படித் தோர், பரப்பினோர், யாவரும் மேதைகள் தான் என்பது மறுக்க முடியாதுதான்.

**மேதை!** அறிவிலும், ஆராய்ச்சியிலும், சிந்தனையிலும், செயலாற்றும் முறையிலும் பண்பிலும் வளர்ந்துள்ளவ னாவான்!

மேதை மனிதனது மேதை நல்ல முறையிலிருந்து மாறி, மேதாவித்தனம், குறுக்கு வழியில், அதாவது பிறரது அறியாமையை, அதைவிட சிக்கலான சூழ்நிலையைப் பயன் படுத்தித் தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும், தங்களது மேதையால், பிறரைத் தாழ்த்தி, தாழ்த்தி மட்டுமல்ல, அடிமைப் படுத்தி, உடல், உழைப்பு மட்டுமல்ல, அறிவை யுமே கட்டுப்பாடாகக் கலங்கச் செய்து குழப்பித் தன்னடிமை யாக்குகின்றனர்!

மேதையின் புத்தி கூர்மையால், சுகவாழ்வு வாழ, குனி யாது வளையாது குந்திக் குதிர்போல் பெருக்கக்கண்டு பிடிக்கப்பட்ட சுயநலச் சுரண்டலே, புராணங்கள்-புராணப் போதை!

போதையிலே மயங்கிச் சிந்தனையற்று மட்டுமல்ல, சிந் திக்கவே மறுத்துக் கிடக்கும் மக்களின் மன நிலையைத் தட்டி, தூண்டி, கிளறி, சுறு சுறுப்பூட்டிடும் நல்ல முயற் சியை, மேதைகள், குறுக்கு வழியிலே சென்ற சிங்கார வலையை, புராணப் போதையைத் தெளிய வைத்திட, இக் காலத்தில் பலப்பல மேதைகள்—மேதை, மக்களின் மேன் மைக்கே பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தையும் எழுச்சியையுமே வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட,

மேதைகள், சிந்திக்கத் தெரிந்தவர்கள்—சிந்தனைத் துணிவுடன் செயலாற்றும் தீரர்கள் பலர் தேவை! தேவை, திராவிடம் வாழ, வகையாக, வளமாக என்ற எண்ணத்தால் எழுந்த எழுச்சி முரசொலியே இந்நூல்!

புராணப் போதை யுள்ளோரைத் தெளிவிக்குமா, தெளிவிக்காதா என்பதல்ல, இந்நூலின் விளைவால் விளைந்திடும் பயன், புராணப் போதை தெளிய வேண்டும், தெளிவிக்கப்பட வேண்டும் என்ற இதயங் கொண்ட இளைஞர், இளைஞர் குழாமை நாட்டிலே, உண்டாக்கிப் பல மேதைகளின் பணியை புராணப் போதையைப் போக்கிட அளித்திடும் என்பது மட்டும் நிச்சயம்.

சென்னையில் பலப்பல இடங்களில் தோழர் கருணாநிதி அவர்கள் பேசிய பேச்சுக்களின் எழுத்துருவ மாகும். கருணாநிதிக்கு என் நன்றி!

படித்துப் பயன் பெறுங்கள்! பண்புள்ள மேதைகளாகுங்கள்!

வணக்கம்,

**மு. நமசிவாயம்**

பண்ணையாளர்.

## படித்துவிட்டீர்களா?

—●—

மு. கருணாநிதி

| | | | |
|---|---|---|---|
| புராணப் போதை | 1 | 0 | 0 |
| இனமுழக்கம் | 1 | 0 | 0 |
| இரத்தச்சுவடு | 1 | 0 | 0 |
| பலிபீடம் நோக்கி | 1 | 0 | 0 |
| கொலைக்களம் | 0 | 8 | 0 |
| தூக்குமேடை | 1 | 8 | 0 |
| வாழமுடியாதவர்கள் | 0 | 12 | 0 |
| நச்சுக்கோப்பை | 0 | 12 | 0 |
| பெரிய இடத்துப்பெண் | 0 | 8 | 0 |
| தப்பிவிட்டார்கள் | 0 | 6 | 0 |

ஊடுருவி

| | | | |
|---|---|---|---|
| வீரமங்கை ஜோன் | 1 | 0 | 0 |
| ஒளிவிளக்குகள் | 1 | 0 | 0 |
| லைலாமஜ்னு | 1 | 0 | 0 |
| மாஜி கடவுள்கள் | 1 | 0 | 0 |
| சீனத்துச் சிங்கம் | 1 | 0 | 0 |

விபரங்கட்கு:-

**கலைமன்றம்**

122, வரதாமுத்தியப்பன் தெரு,

**சென்னை-1**

# குட்டிக் கதைகள்!

## குரங்காட்டம்!

குட்டிக் கதைகள், ஒன்றல்ல இரண்டல்ல, மூன்று குட்டிக் கதைகள் சொல்லப் போகிறேன், தோழர்களே! சொல்லப் போகிறேன்.

ஆம். குட்டிக் கதைகள் கூறிக் கூறிக் கதை பேசிக் காலங் கடத்திடும் ஆச்சாரியாரின் ஆட்சி பற்றிய அலங் கோல நிலையை விளக்கிடத்தான் குட்டிக் கதைகள் கூறப்போகிறேன் நான்.

குட்டிக் கதைகள் பேசிடும் குல்லூகப்பட்டரைப் பற்றிய விளக்கங்கள் தந்திட குட்டிக் கதைகளையே துணைக்கழைக்கின்றேன். கேளுங்கள், தோழர்களே, கேளுங்கள்! கருத்தூன்றிக் கேளுங்கள், குட்டிக் கதைகளை.

பலே சூதாடி! ஆம் அவன் ஒரு பலே சூதாடிதான். சூதாடுவதுதான் அவனது வேலை, வாழ்வு, வாழ்க்கையின் இலட்சியம் என்ற நிலையிலே உள்ளவன்.

காலையிலே சூதாட ஆரம்பிப்பான். காலைக் கடன்களைப் பற்றிய கவலையே தோன்ருது அவனுக்கு. சூதாடுவான் சூதாடுவான், சூதாடிக்கொண்டே பொழுதைக் கழிப்பான்.

நேரம் போவது தெரியாது சூதாடிக்கொண்டே இருப்பான், காலை, பகல், மாலை, இரவு என்ற கால மாறு தலைப்பற்றிய கவலைகள் ஏதுமின்றி.

உணவு பற்றிய அக்கரையோ, உறக்கத்தைப் பற்றிய சிந்தனையோ சிறிது மில்லாத சோம்பேறி, சூதாடி, அவன்.

சூதாட வருவோர் போவோரையெல்லாம் வலிய வலிய இழுத்து வம்புகள் செய்வான். வாதுகள் புரிவான்.

சூதாட்டந் தவிர வேறு வேலைகளில் பிறருடன் அவனுக்குத் தொடர்போ, பேச்சோ கிடையாது.

ஊரார் அவனைக் கண்டு மிரண்டிடும் அளவுக்கு அவனது சூதாட்டப் பித்து, வளர்ந்து விட்டது.

திடீரென ஒருநாள் அவன் ஊரார் ஒருங்கே கூடியுள்ள கூட்டத்திலே, தன்னைப்பற்றிப் பேசி, அறிமுகம் செய்து கொண்டான். என்னவென்று அறிமுகம் செய்து கொண்டான்?

"நான் ஒரு சூதாடி! பலே சூதாடி!" சோம்பேறி! என்ற முறையிலே அல்ல! பின் எப்படி? என்னவென்று.

"ஊர் மக்களே, உங்களுக்கு என்னைத் தெரியும், மிகமிக நன்றாக. என்னைப் பற்றி அறியாத ஒன்றையும் நான் உங்களுக்குச் சொல்லப் போவதில்லை, இப்போது.

நான், மிகவும் யோக்கியமான முறையிலே, எனது வாழ்நாளைக் கழித்திருக்கிறேன். நாணயம் தவறாதவன்.

சூது சூதுப்புக்குப் பெயர் போனவன் என்பதெல்லாம், உங்களுக்குத் தெரியாத தல்ல.

எனவே, இந்த நிலையில் எனக்கு ஒரு பட்டம் என் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதற்குச் சான்ருகத் தரவேண்டும்.

'யோக்கியன்' என்ற அடைமொழியோடு என்னை இன்று முதல் அழையுங்கள் என்று கேட்டான்.

ஊரார் இதனை ஒப்புவரா? மாட்டார்கள் என்பது, உங்கள் அனைவரின் எண்ணத்திலும் தோன்றத்தான் தோன்றும்.

ஆனால், இங்கேதான் விசித்திரமான, வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெறுகிறது, நண்பர்களே.

'சரி யோக்கியரே' என்று ஊரார் ஒப்பி, அந்த பலே சூதாடியை அன்று முதல் யோக்கியன் என்று அழைத்தனர். இது முதல் குட்டிக் கதை.

என்னப்பா நடக்க முடியாத நம்பவும் முடியாத நிகழ்ச்சியைக் கதை யென்று கூறிக் கதைக்கிருயே, என்று கனல் தெறிக்கப் பேசலாம் என்னைப் பார்த்து.

நான் ஒன்றும் கதையளக்க வில்லை. இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்கத்தான் நடக்கின்றன. இங்கே, இன்று, இந்த நாட்டில் என்பதையும் விளக்கத்தான் போகிறேன் மற்ற இரு குட்டிக் கதைகளையும் கூறி விட்டு.

'வழிப்பறித் திருடன்' என்ற விருதுபெற்று வாழ்ந்து வந்தான், ஒருவன், நாட்டில். வழிப்பறி செய்வதிலே பலே கெட்டிக்காரன் அவன்.

தனிவழியே செல்லும் பார வண்டிகள் முதல், காலிவண்டிகள்வரை நிறுத்தி, பிரயாணிகளிடமிருந்து எதையும் பறிப்பான், அந்த வழிப்பறிக் கொள்ளைக் காரன்.

பிரயாணிகள் செல்லும் மோட்டார்களை நிறுத்துவான். தாலி முதல் தகர குவளை முதல், எது கிடைத்தாலும், பறித்துக்கொள்ளத் தயங்கமாட்டான், அவன்.

அவன் பிரபலமாகப் பெயர் பெற்றுவிட்ட, பயங்கர வழிப்பறித் திருடனாகி விட்டான். கருணை யேதுமின்றிக் கன்னியரை மிரட்டுவான்.

கனவான்கள், தனவான்கள் ஏழை—பணக்காரன் எவரிடமும் தன் கைவரிசையைக் காட்டத் தவறமாட்டான், அந்த வழிப்பறித் திருடன்.

திடீரென, அவன், அந்த வழிப்பறித் திருடன், ஒருநாள், ஊரிலே தோன்றினான்.

ஊராரைக் கூட்டமாகக் கூட்டி வைத்துத் தனக்கு 'நாணயஸ்தன்' என்ற பட்டத்தைக் கொடுத்து, தன்னிடம் நம்பிக்கை தெரிவிக்குமாறு கேட்டான். ஊராரும் 'சரி' என்றனர்.

'கேலியா செய்கிறாய், கருணாநிதி, கதையாம் கதை கருத்தற்ற கதை இதையும் நம்பத்தான் வேண்டுமா, நாங்கள்?' என்று சலிப்படையாதீர்கள்.

சர்வசாதாரணமாக இத்தகைய நிகழ்ச்சிகள் நாட்டில் நடக்கின்றன என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். கொஞ்சம் பொறுங்கள். மூன்ருவது குட்டிக்கதையையும் கூறிவிடுகிறேன்.

விபசாரி—பெயர் பெற்ற விபசாரி. வாலிபர்களை வலிந்து வலிந்து பிடித்திழுத்து விபசாரியாகவே காலத்தைக் கடத்திவருபவள். இத்தகையவள் ஒருவள் வாழ்ந்தாள், ஒரு நகரில்.

வயது முப்பதிற்கும் மேற்பட்டது என்ருலும் வாலிப வனிதையாகத்தான் காட்சி யளிப்பாள். வசீகரி என்று பிறர் நினைத்திடும் அளவுக்குத் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதிலே கைதேர்ந்தவள், அவள்.

முகத்திலே, உள்ள விழுந்துவிட்ட சுருக்கங்களைப் பவுடரும், ஸ்னோவும் பூசி மறைப்பாள். தலைவாரிப் பூச்சூடி, ஒய்யார ஆடை, அணிகள் பலப்பல விதங்களிலே அணிந்து தளுக்கிக் குலுக்கி, மினுக்கிப் போவார் வருவாரைக் கண்காட்டி, கைகாட்டி அழைத்திடுவாள், அந்தக் கைகாரி—வளையல் கைகாரி—வசிகரி—விபசாரி.

விபசாரி என்று ஊரிலே இழித்தும் பழித்தும் எண்ணப்பட்ட பேசப்பட்ட, அவள், ஊர்மன்றத்தை ஒரு நாள் கூட்டித் தனக்குக் 'கற்புக்கரசி,' என்ற பெயரைக் களிப்புடன் சூட்டவேண்டுமென்று கேட்டுப் பெற்ருள்.

ஆம்; விபச்சாரிக்குத்தான் 'கற்புக்கரசி' என்ற கண்ணிய மொழி அடைமொழி யாக்கப்பட்டது அந்நகர மாந்தர்களால்.

'விபரீதமான கதைகள்தான் உன்னுடைய குட்டிக் கதைகள், என்ன விளக்கம், எதற்கு இதெல்லாம்? என்ற சிந்தனையில் ஈடுபடவேண்டாம், விளக்கிவிடு கிறேன் இதோ!

வேலை, வெட்டி ஏதுமின்றி போவார் வருவாரை யெல்லாம் பிடித்து இழுத்து வைத்துக்கொண்டு நாளெல்லாம் சூதாடிக்கொண்டே காலங் கழித்தவ னுக்கு ஊரார், 'யோக்கியன்' என்ற பட்டமும், வழிப் பறித் திருடனுக்கு, 'நாணயஸ்தன்' என்ற பட்டமும், ஊரறிந்த விபசாரிக்கு, 'கற்புக்கரசி' என்ற பட்டமும் கொடுத்தனர் என்று கூறினேன்.

உண்மையிலேயே கதையிலேகூடக் கற்பனை செய்து பார்க்க முடியாத நிகழ்ச்சிகள்தான் இவை!

ஆனால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் கதைகளிலே கூடக் கற்பனைக் கண்கொண்டு காணக் கூசிடும் நிகழ்ச்சி கள் நாட்டிலே நடக்கத்தான் நடக்கின்றன.

ஊரறியப் பொய் பேசுபவனும், எத்தனும், ஏய்ப் பவனும், புரட்டனும் ஊரிலே பெரிய மனிதனாக, கன வானாக, கண்ணியம் மிக்கவனாக மதிக்கப்படுவதை, நடத்தப்படுவதைக் கண்டதில்லையா, நாம்? கண்டிருக் கிறோம்!

எத்தன், ஏய்ப்பவன், பொய்யன், புரட்டன், கள்ளன், காமுகன் என்றெல்லாம் அழைக்கப்பட வேண்டியவர்கள் மாறாகப் பெரிய மனிதர்களாகவும் - கனவான்க ளாகவும் - கண்ணிய புருடர்க ளாகவும்

காட்சி யளிக்கின்றனர், நடமாடுகின்றனர் நாட்டில் என்பது மறுக்க முடியாத உண்மைதானே!

ஏன் மௌனம்? சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே, சிந்தித்துப் பாருங்கள்.

நான் கூறிய குட்டிக்கதைகள் வேண்டுமானால், மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகப் படலாம் உங்களுக்கு, கேள்விப்பட்டவுடனே.

ஆனால், நாட்டின் நானாவித நிகழ்ச்சிகளையும், நாட்டிலே நடைபெறும் பலப்பல காட்சிகளையும், நாட்டில் நடமாடிடும் பல்வேறு குணம் படைத்த மனிதரையும், அவரது பேச்சு, நடை—உடை—பாவனைகளையும் கருத்தூன்றிக் கவனித்தால், உண்மையில் இதைவிட, குட்டிக் கதைகளைவிட அதிசயமானதும், ஆச்சரியப்படத் தக்கதுமான பலப்பல காட்சிகள், பல்வேறு குட்டிக் கதைகள் மட்டுமல்ல, சோகத் தொடர் கதைகளும் உங்களுக்கு நிச்சயமாகக் காணப்படும்.

கண்ணும் கருத்தும் படைத்தோர், நாட்டு நிகழ்ச்சிகளிலே நித்தம் நித்தம் இத்தகைய காட்சிகளைக் காண்பர்.

பெரிய மனிதர், ஞானி, மகான், மாமுனிவர் என்றெல்லாம் போற்றப்பட்டவரும் (ஒரு குறிப்பிட்டவர்களால் மட்டுமேதான்) ஆச்சாரியார் அவர்கள், சென்னை மாகாணத்தின் பிரதமர் என்றும், எதை எதையோ சொல்கிறார் - செய்கிறார், அர்த்தம் – அவசியம்- தேவை எதுவும் இன்றி!

ஆச்சாரியார் அவர்கள் சொல்லுகிறார் எதை எதையோ, செய்கிறார் வேறு எவை எவைகளையோ? வேடிக்கைதான்.

ஆச்சாரியார் அரசியல் துறவு பூண்டு விட்டதாகப் பறை சாற்றப்பட்டது, பலப்பல பத்திரிகைகளிலும். பலர் பலவிதமாக வருந்தினர், ஆச்சாரியாரின் இத்தகைய திடீர்த் துறவுக் கோலத்தைக் கண்டு.

ஆனால் எப்படியோ ஆச்சாரியார் மீண்டும் அரசியலில் குதித்துவிட்டார், பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்வதற்காக.

ஆச்சரியார் - குல்லூகபட்டர் ஆச்சாரியார், அரசியலில் நுழைந்த விதம், அதுவும் முதலமைச்சராக நுழைந்தவிதம், குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால் கொல்லை வழியே உள்ளே புகுந்த விதம் ஒரு வேடிக்கை நிகழ்ச்சி. வேடிக்கை நிகழ்ச்சி மட்டுமல்ல, விபரீதமான நிகழ்ச்சியுங்கூட.

ஆம்! ஆச்சாரியார் கொல்லை வழியே புகுந்து இந்த மாகாணத்தின் முதலமைச்சராகப் பவனி வருகிறார் என்பதை மறுப்போர் யார்? யார்தான் மறுக்க முடியும்.

இது தனிப் பிரச்சினை. தனியாக, மிகவும் விளக்கமாக ஆராய்ந்திட வேண்டியதாகும். அது பற்றி மீண்டும் பேசுகிறேன். இப்போது குட்டிக் கதைகளுக்கு வருவோம்.

ஆச்சாரியார் ஆட்சிப்பீட மேறியதும் ஊர் ஊராக, நகரம் நகரமாகப் பவனிவரத் தொடங்கிவிட்டார்.

பலப்பல வேலைகள் அவருக்கு, முதலமைச்சர் ஆகி விட்டதும் ஏற்படுகின்றன, அரசியலிலும் சரி, அரசியல் அல்லாத காரியங்களிலும் சரி.

அதுமட்டுமல்ல! இடையிடையே ஆச்சாரியார், தமது கட்சிக்கு, காங்கிரஸ் கட்சிக்குப் பலம் தேடிட, புதுமெரு கேற்றிடப் பிரச்சாரம் வேறு செய்து வருகிறார்.

குட்டிக் கதைகள் கூறுகிறார். பக்திப் போதனைகள் புரிகிறார். சாஸ்திரம், சம்பிரதாயம், முன்னோர் பழக்கம், வழக்கம் எதையும் துணைக்கழைத்திடத் தயங்கவில்லை ஆச்சாரியார்.

ஆச்சாரியார் ஆட்சிப்பீட மேறியதும், ஒரு சில திங்களுக் குள்ளேயே, மத்திய மக்கள் சபைக்குரிய இரண்டு இடங்கள் சென்னை மாகாணத்தில் காலி யாயின.

மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு, மத்திய மக்கள் சபைக்கு, டெல்லி பார்லிமெண்டுக்கு அங்கத்தினர் களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கோவைத் தொகுதியிலும், அருப்புக்கோட்டைத் தொகுதியிலும் இந்த மாகாணத்தில்.

கோவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அடுத்து அருப்புக்கோட்டைத் தொகுதி யிலும் காங்கிரசே வெற்றி பெற்றிட வேண்டுமென்று படாத பாடுபட்டனர் காங்கிரஸ்காரர்கள் எல்லோரும்.

ஆச்சாரியார், அருப்புக்கோட்டைத் தொகுதிக்குத் தாமே நேரில் சென்று பலமான பிரச்சாரம் செய்தார்.

காங்கிரசின் தியாகத்தையும், அதன் அவசியத் தையும் விளக்கி விளக்கிப் பேசினர்.

'காங்கிரசே நாட்டின், 'நாட்டு மக்களின் பிரதிநிதி' என்று மக்கள் நம்ப வேண்டும், நம்பி காங்கிரஸ்காரர் களேயே தேர்தலில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறையிலே பேச்சும் எழுத்தும் காங்கிரசின் மூலே முடுக்குகளி லிருந்தெல்லாம் ஒரே மூச்சாக நடை பெற்றது.

ஆச்சாரியார், தேர்தலில், அருப்புக்கோட்டைத் தேர்தலில் மக்கள் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டார். காங்கிரஸ்தான் வெற்றிபெற வேண்டும், மக்களுக்கு அதுதான் நன்மை என்பதைப் பலவிதமாகவும் விளக்கிக் காட்டினர்.

இதோடு ஆச்சாரியார் நின்றுவிடவில்லே. இதைவிட மேலும் உயர்ந்து சென்ருர். தம்மைத் தாமே, வலுவில், ஒரு நிர்ப்பந்த நிலேமைக்குத் தள்ளிக்கொண்டார்.

கொல்லே வழியே வந்ததைப் பற்றிக் கவலேப்படாத ஆச்சாரியார், அருப்புக் கோட்டைத் தொகுதியில் பேசும் போது, மக்களேப் பார்த்து, மக்களேப் பார்த்துமட்டு மல்ல, மாற்றுக் கட்சிக்காரர்களேயும் பார்த்து, ஓர் அறைகூவல் விடுத்தார்.

தம்மை மறந்த நிலேயில், தமது வாக்கு வேதவாக்கு, அருள் வாக்கு, ஞானியின் திருவாய் மொழி என்று

நினைத்து மக்கள் கண்மூடி ஏற்பர், அதன்படி நடப்பர் என்று எண்ணித் தான் கூறினாரோ, யாதோ, நமக்குத் தெரியாது. ஆனால் ஆச்சாரியார், அத் தொகுதியிலே தேர்தல் கூட்டம் ஒன்றில் ஓர் அறை கூவல் விடுத்தார். மிக மிகத் தெளிவாக விடுத்தார், பொது மேடையிலே, பொதுக் கூட்டத்திலே, பொது மக்களிடையே, அந்த அறைகூவலை.

அருப்புக்கோட்டைத் தொகுதியிலே நிற்கும் காங்கிரஸ் கட்சிக்காரரையே, மக்கள் டெல்லி பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவரைத்தான் நிச்சயமாக ஆதரிக்க வேண்டும். இவ்விதம் ஆதரிப்பதானது, ஆச்சாரியரிடம், அவரால் அமைக்கப் பட்டுள்ள மந்திரி சபையிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு என்று கூறினார்.

அருப்புக் கோட்டையிலே, காங்கிரஸ் தேவையில்லை யென்று, காங்கிரஸ் கட்சிக்காரருக்கு ஓட்டு போடாவிட்டால், அவரைத் தோற்கடித்து விட்டால், ராஜாஜியிடம் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்றுதான் பொருள் படும். எப்படியும் மக்கள் காங்கிரசைத்தான் ஆதரிப்பார்கள் என்பது உறுதி—நிச்சயம். அவ்விதம் இன்றிக் காங்கிரஸ்காரர் தோற்றுவிட்டால், "நான் ராஜினுமா செய்கிறேன் பார்," என்று வாக்காளர்களைப் பார்த்து அறை கூவல் விடுத்தார், அன்பர் ஆச்சாரியார்; வெற்றி தமதே என்ற அளவிற்கு மீறிய எண்ணத்தில்.

அருப்புக் கோட்டையிலே தேர்தல் நடந்தது; முடிவும் தெரிந்தது. முடிவு என்ன?

மக்கள், மகான் (!) என்று புகழப்படும் ராஜாஜி யின் அறைகூவலை ஏற்று, அவருக்கு வெற்றி தேடித் தந்தனரா ?

காங்கிரசுக்கே, காங்கிரஸ் கட்சியின் அபேட்சக ருக்கே ஓட்டுகளைப் பெருவாரியாகப் போட்டுத் தேர்த லிலே காங்கிரசுக்கு வெற்றிபெற வழி வகுத்தனரா மக்கள், அருப்புக்கோட்டைத் தொகுதி மக்கள், வாக் காளர்கள்?

காங்கிரசுக்குப் பூரண, பெருவாரியான வாக்குகளை யளித்து, வெற்றி பெறச்செய்து அதன் இராஜகோபா லாச்சாரியாரிடமும், அவரது மந்திரி சபையினிடமும் நம்பிக்கை இருக்கிறது; நம்பிக்கை இருக்கிறது" என்று தெரிவித்தனரா தெளிவாக?

என்னதான் முடிவு; அருப்புக்கோட்டைத் தொகு தித் தேர்தலிலே யார்தான் வெற்றி யடைந்தது?

காங்கிரசா? காங்கிர சல்லாதாரா வெற்றி பெற்றது? யாருக்கு வெற்றி கிடைத்தது, மக்களின் நம்பிக்கை காங்கிரசிடம்தான் என்பது தெளிவாகத் தெரிவிக்கப் பட்டுவிட்டதா, அருப்புக்கோட்டைத் தொகுதியிலே காங்கிரசையே மக்கள் ஆதரித்து, அமோகமான வாக்கு களைப் போட்டு, காங்கிரஸ் அபேட்சகரையே வெற்றி வீரராக்கியதன் மூலம்?

இப்போது குறிப்பிடப்பட்டதுபோன்ற கேள்வி கள் அநேகம் கிளம்பத்தான் கிளம்பின, நாடெங்கும்

அருப்புக்கோட்டைத் தொகுதி தேர்தல் முடிவு கிடைத்திடும் வரை? ஏன்? எதனால்?

அருப்புக்கோட்டைத் தொகுதி மக்களின், வாக்காளர்களின் முடிவைப் பொறுத்தே இராஜகோபாலாச்சாரியும், அவரது மந்திரிசபையும், அதுமட்டுமல்ல, சென்னை மாகாணத்தின் காங்கிரசின் கண்ணியமும் நிலைப்பதும், நிலை குலைந்திடும் நிலையும் இருந்ததாகக் கருதப்பட்டதே!

இந்தக் கருத்து, மாற்றுக் கட்சிக்காரர்கள் கட்டிவிட்ட கதையல்ல, வம்பல்ல, வதந்தியுமல்ல.

நாடாள வந்த மந்திரியார், ஆச்சாரியார் அவர்களே விடுத்த அறைகூவல் அல்லவா இக்கருத்து.

மந்திரிசபை வாழ்வதும் வீழ்வதும், ஆச்சாரியார் அமைச்சராக இருந்திடுவதும், இல்லாது போய்விடுவதும் அருப்புக்கோட்டையிலே வாக்காளர்கள் அளித்திடும் தீர்ப்பைப் பொறுத்தே இருக்கிறது.

என்னை ஆதரிக்காமலா போகிறார்கள், பார்ப்போம்; என்மீது நம்பிக்கை இல்லையென்று கூறிவிடுவர், கவனிப்போம் நிச்சயம் எனக்குத்தான் ஆதரவு தந்திடுவர் என்றெல்லாம் கனவு கண்டு ஆச்சாரியார், 'அருப்புக்கோட்டையிலே காங்கிரஸ் தோற்றுவிட்டால், என் மீதும், எனது மந்திரி சபையின்மீதும் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று அறிவிப்பதாகும். எனவே காங்கிரஸ் வெற்றி பெற்றே தீரவேண்டும். போடுங்கள் ஓட்டுக்களை மாட்டுப் பெட்டியில்! காட்டுங்கள் காங்கிர

சிடம் நம்பிக்கையை,' வாக்காளர்களைப் பார்த்துப் பகிரங்க அறைகூவல் விடுத்தார்!

இத்தகைய சூழ்நிலையில், ஆச்சாரியாரின் ஆட்சியையும், அவரது மந்திரி சபையையும் ஆட்டி வைத்திடும் அளவுக்கு அருப்புக்கோட்டை முடிவு - தீர்ப்பு - தேர்தலின் வெற்றி தோல்வியை நாட்டினர் முக்கியமாகக் கருதியதில் விசித்திரம் ஒன்று மில்லையே!

ஆனால் இதிலே விசித்திரம் என்னவென்றால், தேர்தலிலே ஓட்டு வேட்டைக்குக் கிளம்பிக் கூட்டங்களில் பேசிவிட்டுத் திரும்ப வேண்டிய ஆச்சாரியார் அர்த்தமற்று, அவசியமுமற்று பகிரங்க அறைகூவல் விடுத்து, அருப்புக்கோட்டைத் தேர்தலுக்கே ஒரு புது மெருகு, முக்கியத்துவம் தந்துவிட்டது மட்டுமல்ல, தம்மைத்தாமே, புதியதொரு நிலையற்ற, நிம்மதியற்ற, நிச்சயமு மற்ற முடிவைப்பற்றி நிச்சயமான முடிவு கட்டியது மட்டுமல்ல, முடிவிற்குக் கட்டுப்படப் போவதாகத் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக்கொண்டு பகிரங்க அறைகூவல் விடுத்ததுதான் மிகமிக விசித்திரம்!

இங்கேதான், இந்த நிகழ்ச்சியைத்தான், இந்த நாடறிந்த பகிரங்க நிகழ்ச்சியைத்தான் நன்றாக நினைவில் நிறுத்துமபடி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இவ்வளவு ஆர்ப்பாட்டமும், அர்த்தமும், அதி முக்கியமும் நிறைந்த ஆச்சாரியாரால் கருதப்பட்ட அருப்புக்கோட்டைத் தீர்ப்பு - தேர்தல் முடிவு - வெற்றி தோல்வி பற்றிய செய்திதான் என்ன?

அதன்படி, அவரே விடுத்த அறைகூவலின்படி நடந்துகொண்டாரா, ஆச்சாரியார்? கவனியுங்கள் தோழர்களே, மிக நன்றாகக் கவனியுங்கள்.

அருப்புக்கோட்டைத் தேர்தல் முடிவு தெரிந்தது - தெரிந்துவிட்டது.

ஆச்சாரியாரின் எதைப் பற்றிய விளக்கந்தேடி பெரும் நம்பிக்கை வைத்துப் பகிரங்க அறைகூவல் விடுத்தாரோ, அந்த அறைகூவலை மக்கள்-அத்தொகுதி வாக்காளர்கள் ஏற்றுக்கொண்டு தங்கள் தீர்ப்பைத் தெரிவித்து விட்டனர். ஆச்சாரியாருக்கு !

காங்கிரஸ் தோற்றது—தோற்றுவிட்டது. காங்கிரசால் ஆதரிக்கப் பட்டவர் படுதோல்வி யடைந்தார், தேர்தலிலே.

ஆச்சாரியாரின் அறைகூவல், முறியடிக்கப்பட்டு விட்டது, அருப்புக் கோட்டையிலே! ஆச்சாரியாரின், அகராதிப்படி, அவரது பகிரங்க அறை கூவலின்படி, ஆச்சாரியாரே, உம்மிடம்—உமது மந்திரி சபையிடம் நம்பிக்கை யில்லை என்பதைத் தெரிவித்து விட்டோம், போ - வெளியே என்று ஆச்சாரியார் மக்கள் தீர்ப்பு வழங்கிவிட்டனர், என்பதுதானே பொருள். அர்த்தம், அருப்புக் கோட்டையில் காங்கிரஸ் தோற்றதற்கு!

இதைத்தானே ஆச்சாரியார் தேர்தல் பிரச்சினையாக்கிப் பேசி, பகிரங்கமாக, அறைகூவலாக விடுத்தார், வாக்காளரைப் பார்த்து!

ஆம்! ஆச்சாரியார், கேட்டார், 'என் மீது நம்பிக்கை யிருந்தால் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்! காங்கிரஸ் வெற்றிபெறும்படி செய்யுங்கள்' என்று.

மக்களோ, 'உம்மீது நம்பிக்கை யில்லை,' யென்று அவரது வினவுக்கு விடையளித்து விட்டனர், காங்கிரசைத் தோற்கடித்ததன் மூலம்.

கண்ணிய மிக்கவராக இருந்தால் ஆச்சாரியார் செய்திருக்க வேண்டியது என்ன?

தாமே வலியக் கூறிக்கொண்ட ஒரு அறை கூவலுக்கு அடிபணிய வேண்டியவர்தானே ஆச்சாரியார்? செய்தாரா? செய்வாரா?

அவராகக் கூறிக்கொண்டார், அவராகவே சவால் விடுத்தார் மக்களைப் பார்த்து, 'என்மீது நம்பிக்கை தெரிவிக்கக் காங்கிரசைக் காப்பாற்றுங்கள்-காங்கிரஸ் கட்சியின் அபேட்சகரை வெற்றிப்பெறச் செய்யுங்கள்,' என்று.

வெற்றி கிட்டியிருந்தால், என்ன நிலை, இருக்கும், நாட்டில்?

ஏகோபித்து, அவரும் அவரது சீடகோடிகளும், அவரையும் அவர் சார்ந்துள்ள காங்கிரசையும் தாங்கியுள்ள பத்திரிகைகளும் பலபடப் பேசிப் பேசி, எழுதி எழுதிப் பெருமைப்பட மாட்டார்களா?

'பாருங்கள் என்மீது நம்பிக்கை யிருக்கிறது என்பதைக் காட்டுங்கள் என்றேன். ஆம் என்று காட்டிவிட்டார்கள்,' என்று மாற்றுக் கட்சியினரையும் மற்றவரை

யும் பார்த்து எத்தனை விதங்களே, கூறியிருப்பார். அன்பர் ஆச்சாரியார்?

'காங்கிரஸ்தான், நாட்டு மக்களின் ஏகோபித்த பிரதிநிதி' என்று பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகப் பெரிய எழுத்துக்களிலே போட்டுக் காட்டிடத் தவற மாட்டார்களே!

நிலைமை, அன்பர் ஆச்சாரியார், நிச்சயமாக எதிர் பார்த்ததற்கு எதிரிடையாக மாறிவிட்டது — காங்கிரஸ் தோற்றது, காங்கிரஸ் அபேட்சகர் தோற்கடிக்கப் பட்டார், அருப்புக்கோட்டையிலே!

ஆச்சாரியார் என்ன செய்தார், அருப்புக்கோட் டைத் தீர்ப்பு வெளியானதும், தெரிவிக்கப்பட்டதும்.

தமது பிரதமர் பதவியை விட்டு வெளியேறினரா, தாமே அறைகூவல் விடுத்துக்கொண்டபடி? காங்கிர சிடம் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை ஒப்பி னரா, அவரே கற்பித்துக் கூறிய பகிரங்கப் பொது மேடைப் பேச்சுப்படி?

ஏதும் இல்லை; இவை எதையும் செய்யவில்லை, பேசவுமில்லை ஆச்சாரியார்.

அருப்புக்கோட்டையிலே மூக்கறுபட்டதுபோன்ற நிலை ஏற்பட்டதும், ஆச்சாரியார், புதிய முறையிலே, தனது சாணக்கியத் தந்திரத்தைக் கையாண்டு தம்மிடம் மக்கள், நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறுர்கள் என்பதைக் காட்டிக்கொள்ள முயற்சி செய்தார்.

ஆச்சாரியார், சட்டசபையை, சென்னை மாகாண சட்டசபையைக் கூட்டி வைத்து, அதிலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதாவது, ஆச்சாரியார்மீதும், அவரது மந்திரி சபையின்மீதும் முழு நம்பிக்கை இருப்பதாகச் சட்ட சபையில் தீர்மானம் கொண்டுவந்து, நிறைவேற்றிக் கொண்டார்.

வழக்கமாகத் தீர்மானங்கள், ஆளும் கட்சியைச் சார்ந்த ஆச்சாரியாரோ, அவரது சகாக்களோ கொண்டு வந்து நிறைவேற்றிடும் தீர்மானங்களைப் போலவே இந்த நம்பிக்கைத் தீர்மானமும் நிறைவேறியது, நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது, சென்னை சட்டசபையில்.

இதன்மூலம் ஆச்சாரியார், நாட்டு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபை உறுப்பினர்களின் பெரும் பான்மையினரின் நம்பிக்கையைத் தீர்மானம் மூலம் பெற்றுவிட்டதாகப் பறைசாற்றிக் கொண்டிட நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது.

என்னிடம் நம்பிக்கை இருக்கிறது என்று நாட்டினரின் பிரதிநிதிகள், சட்டசபை உறுப்பினர்களில் பெரும் பாலோர் உறுதி கூறியுள்ளனர்- என்று கூறிக்கொண்டு, அருப்புக்கோட்டையிலே கிடைத்த, தாமாகத் தேடிக் கொண்ட அதிர்ச்சியை, அறைகூவலின் விளைவால் ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்துக்கொண்டதாக ஆச்சாரியார் நினைத்தார் - நிறைவேற்றிக்கொண்டார், நம்பிக்கைத் தீர்மானத்தை, சட்டசபையில்.

சட்டசபையில், இன்று காங்கிரசை ஆதரிப்போர், காங்கிரஸ் கட்சியின் கட்டுக்கு அடங்கி, சார்ந்து அதன் தீர்மானங்களை வெற்றி பெற்றிடச் செய்திடுவோர், அனைவருமே காங்கிரஸ்காரர்களல்ல - காங்கிரஸ் கட்சியின் பேரால் தேர்தலுக்கு நின்று, தேர்தலில் வெற்றி பெற்றவர்களுமல்ல.

குறைந்த அளவு மெஜாரிட்டிகூடக் கிடைக்கவில்லையே, காங்கிரசுக்குக் கடந்த தேர்தலிலே, சட்டசபையில்!

இந்த நிலையில், தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக நின்று காங்கிரசைத் தோற்கடித்துவிட்டுச் சட்டசபைக்கு வந்த, காங்கிரசிடம் மக்களுக்கு இருந்த வெறுப்புணர்ச்சியின் விளைவால் சுலப வெற்றி கண்ட சிலரைத் தன் பக்கம், தனது கட்சிக்கு இழுத்துக் கொண்டார், ஆச்சாரியார், மந்திரி பதவி முதலிய ஆசைகளைக் காட்டி!

இதன் விளைவால் இன்று காங்கிரஸ்காரரும், தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக நின்று வெற்றி பெற்றுச் சட்டசபையினுள் நுழைந்தபிறகு, பல சந்தர்ப்பங்கள், சபலங்கள் காரணமாகக் காங்கிரசைச் சட்டசபையில் ஆதரித்திடுவோரும் சேர்ந்துதான், சட்டசபையில் காங்கிரசின் பலத்தைப் பெரும்பான்மையாக்கியிருக்கிறது. காங்கிரசுக்கு மெஜாரிட்டி இப்படித் தான் தேடப்பட்டுச் சேர்க்கப்பட்டது ஆச்சாரியாரால்.

இத்தகையோர்களைக் கொண்ட சட்டசபையில் தன்னிடம் நம்பிக்கை கோரித் தீர்மானம் கொண்டு வந்தார், ஆச்சாரியார். நிறைவேறியதில் வியப்பென்ன?

இதைக் கொண்டு ஆச்சாரியார், அருப்புக்கோட்டையிலே, நம்பிக்கை தெரிவிக்கப்படவில்லையானால் என்ன, நாட்டின் பிரதிநிதிகளில் பலர் என்பக்கந்தானே, நாட்டிற்கு நம்பிக்கை யுள்ளவனாகத்தான் நான் ஒப்புக் கொள்ளப்பட்டேன் நாடாளும் சட்டசபையிலேயே என்று வீரம் பேசுகிறார், வெற்றி முரசு கொட்டுகிறார்.

நம்பிக்கை, மக்களிடமிருந்து, ஒரு குறிப்பிட்ட பிரச்னையை அவர்மீது நம்பிக்கைத் தெரிவிக்கத் தேர்தலில், அருப்புக்கோட்டைத் தொகுதித் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுபோட்டு, மாட்டுப் பெட்டியை நிரப்பி, காங்கிரசை வெற்றிபெறச் செய்திடுவதிலே தான் இருக்கிறது என்று அறைகூவல் விட்ட ஆச்சாரியார், அதிலே தாம் தோல்வியுற்றது கண்டு, வேறு வழியிலே, 'நம்பிக்கைத் தெரிவித்துக்கொண்டேன் பார்' என்று கொக்கரித்துக் கும்மாள மடிக்கிறார்?

நம்பிக்கை கேட்டபோது, கேட்ட மக்களிடமிருந்து கிடைக்கவில்லை, அவரே கூறிக்கொண்டபடி?

இதை ஒப்பாது, தாமே ஏற்படுத்திய அறைகூவலின் விளைவை, முடிவை ஏற்காது, வேறு வழியில் தன்னைத்தான் பெருமைப் படுத்திக் காட்டிக்கொள்கிறார், ஆச்சாரியார்!

வேடிக்கையான நிகழ்ச்சிதான் இது. நம்பிக்கையற்றவர் என்று, நாட்டினரால் ஒதுக்கப்பட்ட ஆச்சாரியாருக்கு நாடாளும் சட்டசபையிலே நம்பிக்கைத் தெரிவித்த நிகழ்ச்சி மிகமிக வேடிக்கைதான்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட குட்டிக்கதைகளைக் கண்டு கொதிப்பேறியவர்களும், குற்றஞ் சாட்டியவர்களும், குறை கூறியவர்களும் இக்குல்லூகபட்டரைப் பற்றிய நிகழ்ச்சியைக் கண்டு என்னதான் கூறுவார்களோ நான் அறியேன்.

குட்டிக் கதைகளிலே கூறிய நிகழ்ச்சிகளைப் போலத்தானே, நடக்காத, நடக்க முடியாத, நம்பவும் முடியாத நிகழ்ச்சிகள் நாட்டில் நடக்கின்றன என்று கேட்பதில் தவறென்ன?

குட்டிக் கதைகள் கூறிக் கூறி மக்களிடம் குலவுகிறார் ஒரு பக்கம். அதே நேரத்தில், சட்டசபையை குரங்காட்டம் என நினைத்து தம் மனம்போனபடியெல்லாம் ஆட்டிக் காண்பிக்கிறார்.

குட்டிக் கதைகளும், குரங்காட்டமும் நாட்டைக் கொண்டுவிடும் நிலைதான் எதுவோ? சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!

---

# சடுகுடு விளையாட்டா?
# சவால் சண்டையா?

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், பதினைந்து ஆண்டுகட்கு முன்னர், சென்னை மாகாணத்தில் காங்கிரசார் அமைத்த மந்திரிசபையின் பிரதமராகக் கொலு வீற்றிருந்தார்.

அதன் பின்னர், ஐந்து ஆண்டுகளுக்குமுன் மீண்டும் அவரையே பிரதமராக்க முயற்சிக்கப் பட்டது, சில காங்கிரஸ்காரர்களாலும், டெல்லியிலுள்ள காங்கிரஸ் மேலிடத்தாராலும்.

இந்த முயற்சி, சென்னை மாகாணத்தின் அப்போதைய காங்கிரசின் சூழ்நிலையால் முடியாது, முறிந்து போய்விட்டது என்பதெல்லாம், அனைவருக்குந் தெரிந்த பழங்கதை யாகும்.

இந்த மாகாணத்திலிருந்து, இந்த மாகாணத்தின் அரசியல் வாழ்விலிருந்து விலக்கப்பட்ட ஆச்சாரியார், மேற்கு வங்க மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப் பட்டார். அதன் பின்னர் இந்த யூனியனின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலானார்.

இதற்குப் பின்னர், மத்திய சர்க்காரின் இலாக்கா இல்லாத மந்திரி பதவி வகித்தார், சிலகாலம்.

சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் இறந்ததும், அவர் வகித்து வந்த உள்நாட்டிலாகா மந்திரி பதவி தரப்பட்டது, ஆச்சாரியாருக்கு.

சென்ற ஐந்து வருட காலத்தில், ஆச்சாரியார் மேற்குறிப்பிட்ட பதவிகளை யெல்லாம் பெற்றார்.

கடைசியாக அவர், மத்திய சர்க்காரில் உள்நாட்டிலாகா மந்திரியாக இருந்தபோது, மீண்டும் நாடெங்கும் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இந்தச் சமயம் பார்த்து ஆச்சாரியார், தமது மத்திய சர்க்கார் மந்திரி பதவியைத் தாமே வேண்டாமென்று கூறிவிட்டுச் சென்னைக்குத் திரும்பி குற்றாலம் சென்று, குளுமையான வாசத்தை மேற்கொண்டு பஜகோவிந்தம் எழுதிக்கொண் டிருந்தார்.

ஆச்சாரியார் தாம் அரசியல் துறவு பூண்டுவிட்டதாக அறிவித்து விட்டே, பொது வாழ்விலிருந்து, அரசியலிலிருந்து மந்திரி பதவியிலிருந்து தாமே விலகிக் கொண்டார் என்பது நாடறிந்த உண்மையாகும்.

ஆச்சாரியார் பொதுத் தேர்தலிலே பங்குகொள்ளவில்லை. பலர் கேட்டுக்கொண்டும், பலப்பல காங்கிரஸ் காரர்கள் கேட்டுக்கொண்டும், முடியாது என்று மறுத்துவிட்டுக் குற்றாலம் போய்விட்டார்.

இந்த நிலையில் நாட்டில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

இந்தத் தேர்தலின் முடிவுப்படி, காங்கிரசின் பேரால் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றவர் தொகையானது மிகவும் குறைந்ததாக இருந்தது.

சென்னையில் மந்திரி சபை அமைத்திடுவதற்குப் போதுமான பலம், மெஜாரிட்டி பலம் காங்கிரஸ் கட்சிக்கு இல்லாது போய்விட்டது.

இத்தகைய சங்கடமான நிலையைத் தவிர்த்து, மீண்டும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியையே சென்னையில் ஏற்படுத்திட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினரும், அதனது ஆதரவாளர்களும் துடிதுடித்தனர்.

மெஜாரிட்டியற்ற கட்சி மந்திரி சபையை அமைக்க முடியாதே? என்ன செய்வது என ஏங்கினர், தவித்தனர் காங்கிரஸார், சென்னையில் தமது சட்டசபைக் கட்சியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைப் பார்த்து.

காங்கிரசின் கண்ணியத்தைக் காப்பாற்றிட வேண்டுமானால் சென்னையில், காங்கிரஸ் கட்சி மந்திரி சபையை அமைத்தாக வேண்டும்.

காங்கிரஸ் கட்சி மந்திரி சபையை அமைத்தாக வேண்டுமானால், அதற்குப் பலம், மேலும் புதுபலம், கூட்டுப்பலம், ஆள்பலம், கட்சியின் அங்கத்தினரின் தொகையைப் பெருக்கிப் பலம் தேடியாக வேண்டும் என்ற நிலை!

இப்போது மீண்டும் ஆச்சாரியாரின் பெயர் பலமாகப் பேசப்பட்டது, பலராலும்.

சென்னை சட்டசபையின் காங்கிரஸ் கட்சியின், தலைவராக ஆச்சாரியாரைத் தேர்ந்தெடுத்து விட்டால், நிலைமையை ஆச்சாரியார் எப்படியாவது தமது சாமர்த்திய, தந்திர உபாயங்களால் சமாளித்து காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்துவிடுவார் என்று பேசினர் - பறைசாற்றினர், ஆச்சாரியாரின் அடிவருடிகளும், ஆதரவற்ற காங்கிரஸ்காரர்களும்.

காங்கிரஸ் தலைவர்கள் சிலர் ஆச்சாரியாரிடம் சென்று வேண்டினர், சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைமையை ஏற்று காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்திடும்படி.

இதற்கு ஆச்சாரியார், தனிப்பட்ட முறையிலே ஒருசில காங்கிரஸ்காரர்களும் தலைவர்களும் கேட்டால் நான் என்ன சொல்வது? நானோ, அரசியல் துறவறம் பூண்டுள்ளேன். இந்த வேண்டுகோள் சட்டசபை காங்கிரஸ் கட்சியினரின் கூட்டத்தில் அவர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மான வடிவில் வந்தால், அல்லவா முறை என்று அனுப்பிவிட்டார்.

இதன்படி, ஆச்சாரியைச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைமையை ஏற்க வேண்டிடும் தீர்மானமொன்றும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியினரால் நிறைவேற்றப்பட்டு ஆச்சாரியாருக்கு அனுப்பப்பட்டு விட்டது.

இதுவும் போதாதென்று, மேலிடத்தாருக்கு இது சம்மதமா, அவர்களும் என்னை விரும்புகின்றார்களா

என்று அறிந்து வாருங்கள் என்ற பதிலிறுத்தார் ஆச்சாரியார்.

உடனே சில காங்கிரஸ்காரர்கள் பறந்தனர் டெல்லிக்கு விமானமூலம். டெல்லி சென்று, காங்கிரஸ் மேலிடத்தாரைக் கலந்து வந்து மீண்டும் வேண்ட, ஆச்சாரியார் மிகவும் பிகுவோடு சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தன்னைத் தேர்ந்தெடுக்க ஒப்பினார்.

ஆச்சாரியார் அவர்களைக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர், காங்கிரஸ் சட்டசபைக் கட்சியினர்.

தலைவராக ஆச்சாரியாரைத் தேர்ந்தெடுத்த அதே கூட்டத்தில் ஆச்சாரியார் அவர்களை, சென்னை கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்கள் மேல்சபை அங்கத்தினராக, அவர், ஆச்சாரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு ஒரு மணி முன்னால்தான் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுக் காங்கிரஸ்காரர் மனம் மிக மகிழ்ந்தனர்.

இதன் பின்னர், ஆச்சாரியாரின் நியமனம் பற்றிப் பலவித வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன.

எது எப்படி இருந்தபோதிலும் கவர்னர் அவர்கள் இராஜகோபாலாச்சாரியாரை அழைத்து மந்திரி சபை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆச்சாரியார் அவர்களும் தமது சாமர்த்தியங்களை யும், சாணக்கிய தந்திர உபாயங்களையும் உபயோகித்துச் சிலரை காங்கிரசின் எதிர் முகாமிலிருந்து காங்கிரசுக்கு இழுத்து தன் கட்சியை, காங்கிரசைப் பலப்படுத்திக் கொண்டு, காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்து விட்டார்.

இவ்விதம் தேர்தலுக்கு நிற்காமல், நியமனம் செய் யப்பட்ட மேல்சபை மெம்பரான ஆச்சாரியார், தாம் தேர்தலுக்கு நிற்க முடியாது என்றும், வயதாகிவிட்டது தான் காரணமென்றும், தமது நியமனத்திற்கு ஒரு நியாயம் கற்பித்துப் பேசுகிறார்!

'எனக்கோ வயதாகிவிட்டது. ஓடியாடித் தேர்தல் பிரச்சாரம் செய்ய, தேர்தல் வேலைகளைக் கவனிக்க என்னால் முடியாது. இல்லாவிடில் நானும் எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் தேர்தலுக்கு நின்று வெற்றிபெற முடியும். எனவே எனது நியமனம் (மேல் சபை அங்கத்தினராக)ப் பேசுவதில் பயனில்லை, சரியு மில்லை, என்ற கருத்துப்பட ஆச்சாரியார் பேசியிருக் கிறார்!

தனக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்ய முடிய வில்லை, முடியாது, வயதாகிவிட்டது என்று காரணங் கூறிடும் ஆச்சாரியார், அருப்புக்கோட்டைத் தொகுதிக் குத் தேர்தல் பிரச்சாரம் செய்யப் போனது ஏனோ?

அங்கங்கே முனிசிபல், கார்ப்பரேஷன் தேர்தல் கூட்டங்களில் கலந்து காங்கிரசுக்காகப் பேசிடும்போது,

இந்தக் காரணங்கள் மறைந்துபோய்விட்டதோ, என்று கேட்கவேண்டி யிருக்கிறதே அன்பர் ஆச்சாரியாரைப் பார்த்து!

தேர்தல் என்ன, அப்படி ஒரு பெரிய போராட்டமா, போர் வீரர்களைத் திரட்டி, பயிற்சி யளித்து, அணிவகுப்புகள் நடத்தி முகாம் அமைத்துப் பாய்ந்திட! ஏன் ஆச்சாரியார் தேர்தலுக்கு நிற்கப் பயப்பட வேண்டும்?

ஜனநாயக முறைப்படி ஆச்சாரியார், ஏதாவது ஒரு தொகுதியிலே தேர்தலுக்கு நின்று, அதுவும் காங்கிரஸ் கட்சியின் பேரால் நின்று வெற்றி பெற்றுத் தானே சட்டசபைக்குள் வரவேண்டும்?

அது முடியாது என்று, வயதைக் காரணங் காட்டிடுவது விவேக மல்லவே; விளக்கமாகவும் இல்லை பொருத்தமாகவும் இல்லையே!

தேர்தல் என்பது என்ன? சடுகுடு விளையாட்டா? தேகபலமும், வாலிப வயதும் தேவைப்பட!

தேர்தல் என்பது ஒரு குஸ்திப் பந்தயமா, கிங்காங்கிற்கும் தாராசிங்கிற்கும் நடப்பதைப்போல, சமபலத்தையும் ஓரளவு வயதையும் கவனித்திட!

தேர்தலில் வயது அதிகம் ஆகிவிட்ட காரணத்திற்காக நின்று, வேலை செய்து, அலுப்படைய முடியாத நிலையில் இருக்கும் குடு குடு கிழவரானல், இவர் நாட்டை எப்படிப் பரிபாலிக்க முடியும் என்று ஏன் கேட்கக்கூடாது.

குட்டிக்கதைகளும், பஜகோவிந்தமும் கூறியும் பாடியுமே காலந்தள்ள முடியுமா? அருப்புக்கோட்டை அதிர்ச்சி அவரை இப்படிப் பேச வைத்திருக்கிறது என்பதல்லாது, வேறு என்ன?

ஆச்சாரியார் இப்படி எதை யெதையோ பேசிக் குட்டிக் கதைகள் கூறி மக்களின் கவனத்தையும் கருத்தையும் வேறு பக்கந் திருப்பித் தன் வழியே ஆட்சியில் வீற்றிருக்கலாம் அலுப்பேதுமின்றி என்று எண்ணுவது முறையாகுமா?

ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசும் ஆச்சாரியாரே! ஆண்மை யிருந்தால் தேர்தலுக்கு நின்று பாருங்கள் என்று மக்கள் கேட்டிடும் குரலைக் கவனியுங்கள் கவனியுங்கள்!

கேளாக் காதாகத்தானே தாங்கள் இத்தகைய நேரங்களில் எல்லாம் இருப்பது வழக்கம்? அதற்கு இப்போது மட்டும் விலக்காகி விடுவீரோ?

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்பதை மறந்து குட்டிக் கதைகள் கூறிக் கொட்டாவி விட்டுக் குதூகலிக்க வேண்டாம் ஆச்சாரியார், அவசரப் பட்டு! என்று தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

---

# அரசியல் அரிபரந்தாமன்
# ஆச்சாரியாருக் களித்த அபயம்!

ஆச்சாரியார் ஒரு பக்கத்திலே தமது நியமனம், மேல் சபை அங்கத்தினராக நியமிக்கப் பட்டதைப் பற்றி வயது முதலிய காரணமற்ற காரணங்களைச் சொல்லிப் பார்த்துச் சரியென மக்களை நம்ப வைக்க முயலுகிறார்.

ஆச்சாரியாரை, அவர் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்தெடுக்கப் படுவதற்கு, ஒருமணி, ஒரே ஒரு மணி முன்னதாகத்தான், மேல் சபை அங்கத்தினராகக்கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்கள் நியமித்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஸ்ரீ பிரகாசா அவர்களை, டெல்லியை விட்டு வரும் போது, மத்திய சர்க்கார் மந்திரி பதவியி லிருந்து விலகி வரும்போது, அன்பர் ஆச்சாரியார் அவர்கள், சென்னைக் கவர்னராக வருமாறு வேண்டுகோள் விடுத்து விட்டு வந்தார் என்ற செய்தியைப் பத்திரிக்கைகளிலே படித்ததையும் நினைவிற்குக் கொண்டு வாருங்கள்.

இதன் பின்னர், ஸ்ரீபிரகாசா அவர்கள், ஆச்சாரியார் தான் தன்னுடைய ஆசான், குருநாதர் என்று ஒரு கூட்டத்தில் கூறி யிருக்கிறார்.

மேற் கூறிய செய்திகள், நிகழ்ச்சிகள் அத்தனையையும் நினைவில் நிறுத்தி, நிறுத்துப் பார்த்திடும், உங்களுக்கு என்ன தோன்றுகிறது.

சென்னையின் கவர்னராகப் ஸ்ரீ பிரகாசாவை வரும்படி, அன்பர் ஆச்சாரியார் டெல்லியிலே அழைத்துவிட்டு வந்தார். அதன் பின்னர் அவர் கவர்னராகப் பதவி யேற்றார்.

கவர்னராக அவர் பதவியேற்ற போது, பொதுத் தேர்தல்கள் முடிந்து, சென்னை சட்ட சபையின் பல்வேறு கட்சிகளின் பலமும் நிலையும் தெளிவாகத் தெரிந்துவிட் டிருந்தன.

கவர்னர், முறைப்படி, மெஜாரிட்டி யாகவுள்ள, சட்டசபைக் கட்சியை, கட்சியின் தலைவரை அழைத்து மந்திரி சபை அமைக்குமாறு கேட்க வேண்டும், ஜன நாயகமும் இதுதான்.

அப்போது காங்கிரஸின் பலம் 152 தான், சட்ட சபையில் மந்திரி சபை யமைக்கக் காங்கிரஸால் முடியாது என்பது தெளிவாகி விட்டது, அதற்குப் பூரணமான, ஏன், குறைந்த அளவு மெஜாரிட்டியான அங்கத்தினர்கள் கூடக் கிடையாது, சட்ட சபையில், என்பதால்.

இதுமட்டு மல்ல காங்கிரஸ் கட்சிக்கு பலமில்லையென்பது மட்டுமல்ல, கட்சித் தலைவராக, சட்டசபைக் கட்சியின் தலைவராக எவரைத்தேர்ந்தெடுப்பது; எவரை தேர்ந்தெடுத்தால் ஆள்பிடிப் பலத்திற்கு உதவியாக

இருப்பார் என்று சல்லடைப் போட்டு போட்டுச் சலித்துப் போன நேரம்.

சட்ட சபையில், பலம் வாய்ந்த கட்சியாக, அப்போது ஜனநாயக ஐக்கிய முன்னணி விளங்கியது.

திரு. T. பிரகாசம் அவர்கள் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்தக் கட்சியிலே 166 பேர்களுக்கு மேல் அங்கம் வகித்தனர்.

எனவே, சட்ட சபையில், அதிக பலம் பொருந்தியதாக, அதிக அங்கத்தினர்களை உறுப்பினராகக் கொண்டு மெஜாரிட்டியாக விளங்கிய ஜனநாயக ஐக்கிய முன்னணித் தலைவரை அழைத்து, மந்திரி சபை அமைக்கும்படிக் கேட்டிருக்க வேண்டும், கவர்னர், அவர்கள்.

அவர் அவ்வாறு செய்யவில்லை, ஒன்றும் செய்யவில்லை.

கவர்னருக்குக் கவர்னருடைய கடமையை நினைவூட்டிக் கடிதம் ஒன்றும் எழுதினார், ஜனநாயக ஐக்கிய முன்னணித் தலைவரான ஸ்ரீ பிரகாசம் அவர்கள். கவர்னர் கடிதத்தைக் கவனித்ததாகவே, இன்றுவரை தெரியக் காணோம்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியை அலட்சியப் படுத்தினார், கவர்னர் பிரகாசா, அவர்கள்.

காலம் கடந்து கொண்டே யிருந்தது, சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தங்களுக்குத் தலைவரைத் தேடி தேடியலுத்து, முடிவாக ஆச்சாரியாரிடம் சென்று

முறையிட, அவர்தீர்மானம் வேண்டும் என்றும், மேலி டத்தாரின் அன்பும், ஆசியும், ஆதரவும் பெற்று வருக என்றும் கூறி, பின்னர் ஆச்சாரியார் அவர்கள் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டதும் அவரை அழைத்து, (அப்போதும் காங்கிரசின் பலம் 152 பேர்தான்) மந்திரி சபை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார், கவர்னர் ஸ்ரீபிர காசா அவர்கள்.

ஆச்சாரியார் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவார், அதற்கான சம்மதம் மேலிடத்திலிருந்தும், ஆச்சாரியாரிடமிருந்தும் கிடைத்துவிட்டது என்ற செய்தி நாடெங்கும் பரவி யிருந்த நேரத்திலே, பத்திரிகைகளில் பத்தியாகச் செய்தி கள் பலப்பல நாட்களாகப் பிரசுரிக்கப்பட்டுவந்த அந்த சூழ்நிலையில், ஆச்சாரியார் மேல்சபையில் அங்கத்தின ராக, கவர்னரால் நியமனம் செய்யப்பட்டார், அதுவும் அவர் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு மணி, ஒரே ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக!

உடனே சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவ ராக ஆச்சாரியார், கவர்னரால் அழைத்து உபசரிக்கப் பட்டு மந்திரிசபை அமைத்திடும் பொறுப்பும் தரப்படு கிறார்.

இவை யாவற்றையும் கூர்ந்து கவனித்திடும் எல் லாம் எவ்வளவு முன்னேற்பாட்டுடன் திட்டமிட்டுச் செய்யப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன மக்க ளுக்கு?

வேறு கட்சிக்காரர்களை, அவர்கள் பூரண பலம் பெற்றிருந்தாலும் கவனியாது, காங்கிரஸ்காரர்களுக்குத் தான் ஆட்சிப்பீடம் என்று ஆச்சாரியார் வந்து, தனது தந்திர, உபாயங்களால் ஆட்களைத் தேடிப்பிடித்துக் காங்கிரசைப் பலப்படுத்திக்கொள்ளும் அளவு வரையில், காலம் வரையில் கவர்னர் பேசாமலிருந்தார் என்று தானே கொள்ளவேண்டியிருக்கிறது.

கவர்னர் ஸ்ரீபிரகாசா, ஒரு காங்கிரஸ்காரர், கவர்னராக இருப்பதால் அவரது உள்ளம், உணர்வு அத்தனையும் கட்சிப் பற்றற்று நடக்கவில்லை என்று எண்ண வேண்டிய நிலைக்கல்லவா மக்களை, அவரது செயல் கொண்டுபோய் விட்டது! ஏன் இந்த ஓரவஞ்சனை? ஜனநாயகம் எங்கே?

இந்த நிகழ்ச்சி, அடிக்கடி ஆச்சாரியார் தந்திடும் வியாசர் விருந்தைத்தான், பாரதத்தைத்தான் எனக்கு நினைவூட்டுகிறது!

ஆம், ஆத்திகர்களால் அடிக்கடி ஏத்தி யேத்தித் தொழுதிடும் பாரதம் பற்றிய நினைவைத்தான் எனக்குக் கொண்டு வருகிறது, இந்தச் சந்தர்ப்பத்தில்!

பாரதத்திலே, எப்போதும் பாண்டவர் பக்கத் துணையாகவே இருந்து வந்த கோபால கிருஷ்ணன் - அரிபரந்தாமன் நினைவைத்தான் கொண்டு வருகிறார் பிரகாசா அவர்கள், தமது செய்கையின்மூலம்.

பாரதத்தை அரசியலில் அன்றாடப் பாடமாகக் கொண்டுள்ளனர்போலும் இந்தப் பாரதப் புத்திரர்கள், பாராள வந்ததும்?

அரசியல் அரிபரந்தாமனாக, ஸ்ரீபிரகாசா அவர்கள் நடந்து, ஆச்சாரியாருக்கு அபயம் அளித்திருக்கிறார் போலும்.

பாரதக் கதையிலே வரும், அர்ஜுனனுக்குப் பரந்தாமன் பாரதப்போரின்முன் அபயம் அளித்ததைப் போல!

பாரதத்திலே ஒரு நிகழ்ச்சி! பாரதப்போர் ஆரம்பமாகிவிட்டது. பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே போர்! போர்!

போரிட நாளும் குறித்தாய் விட்டது. இந்தப் போராட்டத்திலே, அரிபரந்தாமன் அவதாரமான கண்ணனைத் தன் பக்கம் துணை நிற்கும்படி கேட்டிட, முதலில் துரியோதனன் புறப்பட்டு கண்ணன் வாழும் துவாரகைக்குச் சென்றான்.

துரியன் சென்றபோது, கண்ணன் துயில் விட்டு எழுந்திருக்கவில்லை என்பதை உணர்ந்த துரியோதனன், 'தூக்கத்திலிருந்து தட்டியெழுப்பித் துணை கேட்பது நல்லதல்ல, துயில் நீங்கி எழட்டும்' என்று கண்ணனுடைய தலைமாட்டிலே (வணங்கா முடியோன் அல்லவா) அமர்ந்து காத்துக்கொண் டிருந்தான்.

தூங்குவது போலப் பாவனை செய்து கொண்டிருந்த கண்ணன், துரியோதனன் வந்ததையும், வந்த காரணத்தையும், வந்து அமர்ந்திருப்பதையும் தனது சக்தியால் தெரிந்து கொண்டான்; மாயக் கண்ணன் அல்லவா, அவன்?

தெரிந்தும் கண்ணைத் திறக்காமலேயே தூங்குவது போலவே, துரியோதனனைக் கவனியாது கண் மூடிப் படுத்திருந்தார், எம்பிரான் திருமாலின் அவதாரமான கண்ணன்! ஏன் தெரியுமா?

கண் விழித்தால்,துரியோதனன்,போரில் துணைவா, என்பான். முதலில் கேட்பதால், மறுக்க முடியாது, ஒப்பித் தீரவேண்டும். கண்ணனுக்கு, துரியோதனனுக்குத் துணைபோக மனமில்லை, இதனை வெளிப்படக் கூறி மறுத்திடவோ, துணிவுமில்லை. இந்த நிலையில் கண் மூடி மௌனியாகத் துயில் கொண்டு படுத்திருப்பதைப் போலப் பாசாங்கு செய்தார், மாதவன், மாமன்னன் துரியோதனன் வந்ததைக் கவனிக்காது போலவே! கண்ணை மூடிக் கொண்டே, 'அர்ஜுனா வருக,' என்று அழைத்தார், கோபாலன்.

உடனே அர்ஜுனன் அங்கு வந்து சேர்ந்தான், கோபாலன் மனநிலை யறிந்து.

வந்த அர்ஜுனன் கண்ணனின் தலைமாட்டில், ஏற்கனவே, முன்னதாகவே வந்து காத்துக் கிடக்கும் துரியோதனனைப் பார்த்தான். பின் கண்ணனின் கால் பக்கம் உட்கார்ந்து கொண்டான். உடனே கண்ணன் கண்ணை விழித்து 'காண்டீபா, வருக, வருக, என்ன தேவை,' என்று கேட்டார்.

அர்ஜுனன் உடனே, பாரதப் போரில் தங்கள் துணை பாண்டவராகிய எங்களுக்குத் தேவை என்று கேட்டான்.

'சரிதான், மைத்துனா, சஞ்சலம் வேண்டாம்,' என்று அர்ஜுனனைத் தட்டிக் கொடுத்து விட்டுத் திரும்பினான் கண்ணன்.

திரும்பிய மாதவன், அப்போது தான் துரியோதனனைப் பார்த்தது போலப் பாசாங்கு செய்து கொண்டே, வரவேற்று வந்த காரியத்தை வினவினான்.

துரியோதனன், தான் வந்த காரணத்தைக் கூறித் தன் பக்கமே கோபாலகிருஷ்ணன் துணை வரவேண்டும் என்றும், தான் முதன் முதலில், அர்ஜுனனுக்கும் முன்னதாகவே வந்து காத்திருந்ததாகக் கூறினான்.

'ஐயோ பாவம், முன்னாலா வந்தாய் நீ, எனக்குத் தெரியாதே, நீ தலைப்பக்கம் உட்கார்ந்து விட்டாயோ, எழுந்தவுடன் கால் பக்கமிருந்த அர்ஜுனனைத்தான் நான் முதலில் பார்த்தேன். முதலில் துணை வேண்டுமென்று என்னைக் கேட்டதும் அவன்தான். அவனுக்கு முதலில் கொடுத்த வாக்கை எப்படி, மாற்ற முடியும். மனமார வருந்துகிறேன் உனக்குத் துணை வருவதற்கில்லையே,' என்று, வருத்தப் படுவது போல் நடித்து வழியனுப்பி விட்டாராம், மாலின் மறு பிறப்பான, மாயோன், மாதவன், யாதவன், கோபாலன், கிருஷ்ணன், கண்ணன்.

இது பாரதக் கதையில் ஒரு நிகழ்ச்சி!

அரிபரந்தாமன் அவதாரமான கண்ணன், தனக்கு வேண்டிய, தன்னுடைய உறவினனான அர்ஜுனனுக்கு உதவ வேண்டும் என்பதற்காக முன்னால் வந்த துரியோதனனைத் தூங்குவது போலக் கண் மூடிக்கொண்டு

கவனியாது அலட்சியம் செய்து, பின்னர், அர்ஜுனனை நினைத்து, நினைத்த மாத்திரத்தில் வரும்படி செய்து, அவனைத் தான் முதலில் பார்த்தது போல நடித்து வாக்கு தந்து, முன் வந்து காத்திருந்த துரியோதனனை ஏய்த்த காட்சியைப் போலத்தானே, நிகழ்ச்சியைப் போலத்தானே இன்றைய சென்னை அரசியலை மதித்து நடத்தி யிருக்கின்றனர் ஸ்ரீபிரகாசாவும், ஆச்சாரியாரும். வேறென்ன?

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவரான T. பிரகாசம், முன்கூட்டிக் கடிதம் எழுதியும் கவனி யாது இருந்து விட்டார் கவர்னர் அவர்கள்.

ஆனால், ஆச்சாரியாரை, அவர் கட்சித் தலைவராக ஒரு மணி நேரத்திற்கு முன்னால், மேல் சபை அங்கத் தினராக நியமித்து விட்டார்!

அடுத்து அவரை, ஆச்சாரியாரை, உடனே அழைத்து அவரிடம் ஆட்சிப் பொறுப்பையும் ஒப் படைத்து விட்டார்!

பாரதப் போருக்குமுன் நிகழ்ந்த மேற் குறிப்பிட்ட தூங்கும் பாவனைப் படலத்தை நினைவில் வைத்துத் தான் இந்த நவீன அரசியல் அரிபரந்தாமன் ஸ்ரீபிரகாசா அவர்கள் அன்பர் ஆச்சாரியாருக்கு அபயம் அளித்தார் போலும்.

பாரதம் போன்ற இதிகாச ஜாலமென்று நினைத்து இத்தகைய முறையற்ற செயல்களில் ஈடுபடுவது ஜன நாயகக் கொலையன்றி வேறென்ன?

# மீண்டும் கிளைவ்?

ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசிவந்த காங்கிரசார் இன்று நாடாண்டிடும் போக்கு ஜன நாயகத்தையே, ஜனநாயகம் என்பதன் பொருளையே புது முறையிலே, அதற்கு நேர்மாறான வழியிலே அமைத்துக் கொண்டனரோ என்று ஆயாசப்பட வேண்டி யிருக்கிறது.

வடநாட்டினர், தென்னாட்டை, சென்னை இராஜ்ஜியத்தை-திராவிட நாட்டைத் தங்களுக்கு மார்க்கட்டாக வைத்துக்கொள்வதில் மிகவும் அக்கரையோடு இருக்கின்றனர்.

இதற்கேற்ற சூழ்நிலை எங்கும், எப்பொழுதும் இருந்திட வேண்டும் என்பதிலே முழு கவனத்தையும் செலுத்திடத் தவறவில்லை, வடநாட்டினர் - வடநாட்டுத் தலைவர்கள்.

சென்னையில் கவர்னராக ஸ்ரீபிரகாசா அவர்கள் நியமிக்கப்பட்டு, அவர் சென்னைக்குப் புறப்படுமுன், டெல்லியில் அவருக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது.

அந்தப் 'பாராட்டு விழாவிலே ஸ்ரீபிரகாசா அவர்கள் பேசியுள்ள பேச்சு மிகவும் கவனிக்கப்பட வேண்டிய பேச்சாகும்.

'நான் சென்னைக்குக் கவர்னராகப் போகிறேன். மிகவும் கடினமான பொறுப்புதான். கிளைவின் வாரிசாகப் போகிறேன்,' என்ற முறையில் அவர் பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது பத்திரிகைகளிலே!

கிளைவின் வாரிசு! என்று தம்மைக் கற்பனை செய்து பார்க்கிறார் ஸ்ரீபிரகாசா அவர்கள், தம்மைச் சென்னையில் கவர்னராக நியமித்தவுடன்!

கிளைவ், ராபர்ட் கிளைவ், இந்தியாவில் ஆங்கிலேயரின் பிடி ஏற்பட்டிட, முதன் முதலில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றிட வித்திட்டவன் கிளைவ்! அந்தக் கிளைவின் வேலையை - வடநாட்டுப்பிடி அழுத்தமாகச் சென்னை மாகாணத்தின்மீது ஏற்பட்டிட, வழியும் வகையும் வசதியும் அமைந்திடும் முறையில், அமைத்திடும் போக்கில்—கிளைவின் வாரிசாகத் தாம் அனுப்பப்படுவதாகக் கனவு கண்டிருக்கிறார்; கனவு கண்டிருப்பது மட்டுமல்ல, அதனை நனவாக்கத்தான் சென்னைக்குப் போவதாகக் கூறியுமிருக்கிறார்.

'கிளைவின் வாரிசாகப் போகிறேன்; கிளைவின் வாரிசாக அனுப்பப்படுகிறேன்' என்று பேசியதின் பொருள் என்ன, இதைத் தவிர? சிந்தியுங்கள் நண்பர்களே சிந்தியுங்கள்!

கிளைவ், இங்கிலாந்தில் இழித்தும் பழித்தும் பேசப்பட்டவன் இளம் வயதில்.

முரடன், முட்டாள், முழுச்சோம்பேறி, முன்னுக்கு வரவே முடியாதவன், மூர்க்கன் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டவன் சரித்திரத்தில்.

சிறு வயதில் வேலை வெட்டி எதுவுமே செய்யாதவனாய், செய்யாதவனாய் மட்டுமல்ல, செய்யவே விரும்பாது ஊர் சுற்றி அலைந்தவன் கிளைவ்!

ஊர் வம்பும் ஊர்ச் சண்டையுமே அவனது உலகம், உற்சாகம், உல்லாச வாழ்வு என்ற நிலையிலே திரிந்துகொண் டிருந்தான்.

சாக்கடையிலே இறங்குவது, சகதியிலே புரள்வது சலசலப்பும், சந்தடியும் உண்டாக்கிடுவது என்பதே அவனது தினக்கடமை என்று கருதி வந்தானும் கிளைவ்.

ஊராரின் நிந்தனையை, உற்றார் உறவினரின் கேலி மொழியைச் சகித்திட முடியாது, அவனது பெற்றோர் பிள்ளையை நினைத்து வேதனைக்குரல் எழுப்பிக்கொண் டிருந்தனர்.

இந்த நேரத்தில், இந்தியாவில், கிழக்கிந்தியக் கம்பெனி என்ற ஆங்கிலேய வியாபாரக் கம்பெனியில் ஒரு சாதாரண வேலைக்கமர்த்தி கிளைவை இந்தியாவுக்கு அனுப்பினர்.

இங்கிலாந்தில் அவனது ஆர்ப்பாட்டமும், அவதியும் தாளமுடியாது தவித்து, தொலைந்தால் போதும் என்று இந்தியாவுக்கு அனுப்பினர். வெளிநாட்டிலாவது அவனது கொட்டம் அடங்காதா, என்ற பேராவலுடன் அவனது குடும்பத்தினர்.

இந்தியா வந்து சேர்ந்த கிளைவ், இராணுவத்திலே சேர்ந்து இந்தியாவில் இங்கிலாந்தின் பிடி, ஆதிக்கம்,

அரசுரிமை நிலைத்திட வித்திட்டான், அடிகோலினன் என்பது சரித்திரம் கண்ட உண்மை, சகலருக்கும் தெரிந்த உண்மையுங்கூட!

கிளைவ் முரடன், மூர்க்கன், விடாப்பிடிக்காரன், நினைத்ததைக் கண்மூடிக்கொண்டு செய்யவேண்டும், செய்து முடித்தே தீரவேண்டும் என்ற வெறி பிடித்தலைந்தவன்.

இப்படிப்பட்ட கிளைவின் மூர்க்கத்தனமும், விடாப்பிடி வெறித்தனமும் ஒரு வகையில், அந்த நேரத்திய சூழ்நிலையில், இங்கிலாந்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியது, இந்தியாவில்!

இதனால், சரித்திரத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆங்கில ஆட்சியின் அஸ்திவாரத்தைக் கட்டியவன், என்று கிளைவ் அழைக்கப்படுவதுண்டு.

அத்தகைய கிளைவாகத் தம்மை நினைத்துக்கொண்டு பேசிவிட்டு, இங்கே வந்திருப்பதால்தானோ என்னவோ, கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்கள் முரட்டுத்தனமாக, தாம் நினைப்பதே நீதி - இட்டதே சட்டம் என்ற முறையிலே ஆட்சி செலுத்துகிறாரோ என்று மக்கள் நினைத்தால், அதிலொன்றும் ஆச்சரியமில்லை என்று கருதவேண்டியிருக்கிறது.

கிளைவ் காலத்தில் ஏற்பட்ட ஆங்கில ஏகாதிபத்தியம் ஒரு சில நூற்றாண்டுகளாவது நிலைத்து நடைபெற்றது இந்தியாவில்.

கிளைவின் உருவிலே வந்த ஆங்கில ஏகாதிபத்தியம் நாடு விடுதலை பெற்ற பின்பும் மவுண்ட்பேட்டன் பிரபு வடிவிலேகூட சிலநாள் நிலைத்திருந்து பின்னர் வெளியேறியது!

ஆனால் கவர்னர் பிரகாசாவின் பேச்சுப்படி, பிரகாசா உருவிலே வரும் வடநாட்டு ஏகாதிபத்தியம், பிரகாசா உருவிலேயே திரும்பும் – திருப்பி யனுப்பப் படும் திராவிட நாட்டை விட்டு என்பது மட்டும் நிச்சயம், நிச்சயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிடர் தம்மை உணர்ந்து உணர்ச்சி பெற்று, தன்மானப் பற்றுகொண்டு தன்னாட்சி நடத்தத் துடித்தெழுந்து விட்டனர்.

திராவிடன் தன்மானமிழந்து, பாரில் அடிமையாய், ஏவலனாய் வாழ்ந்திடும் நிலையிலிருந்து விடுபட, வடநாட்டின் பிடியிலிருந்து விடுபட முனைந்துவிட்டான் என்பதை மறந்து, மறைத்துத் தம் போக்கிலேயே ஆளவந்தார் நடந்திடுவது நாட்டு நிலைமை நன்கு புரிந்து கொள்ளாதது மட்டுமல்ல, நாட்டினரின் நல்லெண்ணத்தையே போக்கிக் கொள்வதாகும்.

ஜனநாயம், ஜனநாயகம் என்று குரல் வலிக்கக் கூவி வந்த காங்கிரசார், தம்மை வடநாட்டாரின் ஏவலராக்கிக்கொண்டு, கிளைவ் பரம்பரையை வாழ்த்தி வணங்கிக்கொண் டிருப்பது நாட்டிற்கு, திராவிட

நாட்டிற்கு இழைத்திடும் மாபெரும் துரோகச் செயலாகும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன்.

மீண்டும் கிளைவ்? மீண்டும் ஒரு ஏகாதிபத்தியம்—வடநாட்டு ஏகாதிபத்தியம், திராவிட நாட்டில் நடைபெற, நிலைபெற்று நின்றிட முயற்சிகள் முழுமூச்சோடு நடைபெறுகின்றனவே!

திராவிடரே, தன்மானமிக்கோரே, தாளமுத்து நடராசன் வழிவந்தோரே, தடுத்து நிறுத்த வேண்டாமா? மீண்டும் கிளைவ்! நடக்கவிடலாமா? நியாயமா? நீதியா? நினைத்துப் பாருங்கள்.

# 'பங்கீடு' ஒழிப்பு!
## பகவான் மீது பாரம்!

இரண்டாம் உலகப் பெரும் போர் முடிந்த நேரத் திலே, போர்க்களமான, போர்க்கள மாக்கப்பட்ட உலக நாடுகளிலே, இந்தியாவில் உணவுத் தட்டும், உறுதுணே யான வாழ்க்கைப் பொருள்களின் பற்ருக் குறையும் ஏற் பட்ட தல்லவா?

பற்ருக்குறை! உணவு, உடை, இருப்பிடம், இன் னும் வாழ்க்கைக்குத் தேவையான பலப்பல, தேவை யான அளவுக்குத் தேவையான நேரத்திலே, தேவைப் படுவோருக்கு, மிக மிக அவசியமும் அவசரமுமாகத் தேவைப் படுவோருக் கிட்டிட முடியாத அபல நிலே ஆரம்பமாகத்தான் செய்தது, இரண்டாம் உலகப் பெரும் போரின், விளேவால், இந்திய உப கண்டத்திலே!

அவசியமான பொருள்களின், விலேயும், ஏன் விநி யோகமுமே கட்டுப் படுத்தப்பட்டது, ஆட்சியாளர் களால்!

கட்டுப்பாடு, விலே யேற்றத்தையும், பொருள் களின் வீண் முடக்கத்தையும், தவிர்க்கப் பயன் பட் டது என்ருலும், பஞ்ச நேரத்தில் பார்த்துப் பணத் தைச் சுரண்டிச் சேர்த்திடும், சூதுமதி படைத்த சுய

நலக் கும்பல்கள், இதனுல் கொழுத்துப் பெருக்கத்தான் செய்தன; ஓரளவிற்கு!

என்றுலும், மக்களின் தேவையை கட்டுப்பாடு அந்த நேரத்திலே ஓரளவு திருப்தி செய்யத்தான் செய்தது!

கட்டுப்படாத கல் நெஞ்சினரும், நேரத்தையறிந்து, நினைத்தபடி விலைகூறி விற்றுவந்த நெஞ்சழுத்தமான வியாபாரிகளும் வீணர்களும், இடைத் தரகர்களும் வெளிப் படையாகத் தமது வேடத்தைக் காட்டிடாது, கள்ள வாணிபத்திலே இறங்கினர்.

கையிலிருந்த கையிருப்பைக் கள்ளக் கிடங்குகளிலும் கட்டிடங்களிலும் மறைத்து வைத்து, நியாய விலைக்கு விற்றிடாது, கள்ளத்தனமாகக் கண்ட கண்ட விலைக்கு கை நிறையப் பணம் பெற்று விற்று வந்த கள்ள வியாபாரிகள் கண்டு பிடுக்கப்பட்ட போதெல்லாம், கையும் மெய்யுமாய்ப் பிடிபட்ட போதெல்லாம் தக்க தண்டனை தரப்பட்டனர்.

எத்தனை யெத்தனையோர் தொல்லைகள், நல்ல நல்ல நன்மைகளுக் கிடையில் ஏற்படத்தான் ஏற்பட்டது, அப்போது.

அந்த முறையிலே, அப்போதைய தேவைக்குத் தகுந்த முறையிலே ஏற்பட்ட,ஏற்படுத்தப்பட்ட நல்லதொரு, நன்மையுந் தந்து வந்த முறைதான் 'பங்கீடு'. 'உணவுப் பங்கீடு' முறையாகும்.

நாட்டின் ஒரு சில பல பகுதிகளில் நல்ல விளைச்சலும், வேறு சில பகுதிகளில் விளைச்சலின்மையும் ஏற்பட்டு, விளைச்சலற்ற பகுதியினருக்குத் தேவையான உணவுப் பொருள்கள், நியாயமான விலைக்குக் கிடைக்க முடியாமற் போய்விட்டது மட்டு மல்ல, நாட்டின் மொத்த உற்பத்தியே கூட, நாட்டு மக்களின் தேவைக்கும் குறைந்த அளவினதாக இருந்தது.

இந்த நேரத்திலே, நாட்டில், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான, முதற் தேவைகளில், முக்கிய தேவையான உணவுப் பஞ்சம் தலை விரித்தாடத் தொடங்கியது!

தலை விரித்தாடத் தொடங்கிய பஞ்சத்தை, பசியின் கோரத்தைப் பொருட்படுத்தி, மொத்த மக்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி, உள்ள, கிடைத்த, கிடைக்கக் கூடிய பொருள்களைப் பங்கிட்டுத் தந்தனர், ஆட்சியாளர்! பங்கிட்டுத் தரும் பெரும் பொறுப்பையும் ஆட்சியாளரே ஏற்றுக் கொண்டனர்!

உணவு உற்பத்தி செய்திடும் நிலங்களிலே, வேறு பொருள்களை உற்பத்தி செய்யாது தடுத்தனர்!

நிலச் சொந்தக்காரர்க ளிடமிருந்து, விளைந்த உணவுப் பொருள்களை, அவர்களது, தேவைக்கும் (பங்கீட்டு அளவுப்படி தான்) விதைக்கும் விட்டு விட்டு, அதிகப்படியானவற்றை, சர்க்காரே விலை கொடுத்து வாங்கி, சேமித்துப் பாதுகாத்து, பங்கீடு செய்தனர், மக்களுக்கு!

வெளி நாடுகளி லிருந்தும் தேவையானபோது, முடிந்த அளவிலே உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்து பங்கீடு செய்து வந்தனர், சர்க்கார்!

அன்றாடக் கூலி வேலை செய்து கையிலே ஏதோ கொஞ்சம் பணத்துடன் வீடு திரும்பிய ஏழைத் தொழிலாளி, நேரே கடைக்குச் சென்று, தனது குடும்பத்திற்குத் தகுந்தபடி, கிடைக்கக் கூடிய, பங்கீடு அரிசியைச் சுலபத்தில், நிச்சயமாகப் பெறும் நிலையிலே, ஓரளவுக்கேனும் நிம்மதியாக, வாழ முடிந்தது.

'பங்கீடு' முறைக்கு முன், பஞ்ச நேரத்திலே, கையிலே காசு கிடைக்கும் நேரத்திலே, கடையிலே அரிசி கிடைக்காது, கிடைத்தாலும் நியாய விலைக்குக் கிடைக்காது! நியாய விலைக்கு மேற்பட்டு விலை கொடுத்தாலும், ஏழைகள் வாங்கும் சிறு, சிறு அளவு தினம் தினம், ஏன், வேளைக்கு வேளை தேடித் திரிந்து, அலைந்து, அலுத்துப் பெரும் ஓயாத, ஒழியாத தொல்லை யென்ற தூற்றுதல்களுக் கிடையே தான் கிடைக்கும்! சில நேரங்களில் அதுவும் இல்லையென்றாலும் இல்லைதான்!

இத்தகைய அவதி நிறைந்த ஆபத்தான நேரத்திலே, வசதியுள்ளோர் மட்டும் சேமித்து வைத்துத் திருப்தியுடன் வாழ, மற்றவர் மீளாத துன்பச் சுழலில் சிக்கித் துடித்திடும், கோர நிலைமையை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து நிறுத்தியது உணவுக் கட்டுப்பாடு! பங்கீடு முறை!

என்னிடம் எழுபது ஏக்கர் இருக்கிறது. என்னிஷ்டம்போல் உண்பேன்! ஏழு எட்டு வருடங்கள் மழை பெய்யா விட்டாலும் எனக்குக் கவலையே இல்லை. சேர்த்து வைத்துக் கொண்டேன், என்று அண்டை அயலார், கையிலே காசிருந்தும், ஏழைகளாய் இருப்ப

தன் காரணத்தால், 'ஏதுமற்ற கூலிகளாய், சொந்த நில மற்ற, ஆனால் பண்ணையாரின் நிலத்தை மட்டும் பண் படுத்திப் பாகுபடுத்திப் பசும் நெல்லை விளைவித்துத் தந்த பாட்டாளிகள், பசியால் உணவின்றி, உணவுப் பொருளின்றி வாடுவதைப் பார்த்துக்கொண்டு விசாரம் ஏதுமின்றி வாழ்ந்திடும் வீணர்கட்கு, மனித மிருகங்கட் குப் 'பங்கீடு' முறை ஒரு பாடமாக, ஏன் படமெடுத் தாடும் பாம்பாகக்கூடக் காட்சியளித்தது என்பது எல் லோருக்கும் தெரிந்ததுதான்.

'எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சேர்த்த சொத்து! எவ்வளவு எருவெல்லாம் கொட்டிப் பண்படுத்திப் பயிரிட்டேன், எங்கிருந்தோ வந்துவிட்டான் படி யளந்து கொடுத்துவிட்டுப்போக, என்று பண்ணைக் காரர்கள், பலகாணி நிலம் படைத்தோர், மிட்டா மிராசுடன் மிடுக்காக வாழ்ந்திடுவோர் அலுத்து ஆயாசப்பட்டனர் உணவுப் பங்கீடு அதிகாரிகள் வந்து உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்திடும் நேரங்களில்!'

உணவுப் பங்கீடு பெருமளவில் உபயோகமான, உருவான முறையாக நடந்துவந்தது.

பங்கீடு பல ஆண்டுகளாக இந்த மாகாணத்தில் இருந்து வருகிறது!

பங்கீடு நாளாவட்டத்தில், நாட்டின் மிட்டா, மிராசு, பட்டா பாத்தியதை படைத்தவர்கள் நாங்களே என்று உரிமை கொண்டாடி நாட்டை ஆண்டிடும் காங்கிரஸ் சர்க்காரின் காலத்திலே, 'கழுதை தேய்ந்து

கட்டெறும்பான' கதையாகப் பதினறு அவுன்சிலிருந்து ஆறவுன்சுக்கும் கீழாக மாறியது மட்டுமல்ல, மனித னைப் பருத்திக்கொட்டையையும், புளியங்கொட்டையை யும், மாடு தின்னும் பிண்ணுக்கையுங்கூடத் தின்று வாழ்ந்திருங்கள் என்று உணவு மந்திரிகள் என்று உலவி வந்த அகிம்சா மூர்த்திகள்(!) உபதேசித்திடும் நிலை கெட்ட நிலைக்கு கலந்து குலைந்து சீர்கெட்டழிந்து விட்டது!

இயற்கைக் கோளாறுகள் வேறு! பருவ மழை தவறி, பல ஆண்டுகளாக மழையின்றி, மண் வளம் வேறு குன்றி, குறைந்து விலை பொருள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குறைந்துவிட்டன என்பதையும் கவனித் துக் கொண்டுதான் இத்தகையப் பேச்சை பேசுகிறோம் என்பதை முதலில் கூறிக்கொள்கிறேன்.

விளையும் பொருள்களையும், தேவைப்படும்பொருள் களையும், சர்க்காரால் கொள்முதல் செய்யப்படும் பொருள்களையும், இடையிலே எப்படியோ கொள்முத லாகாமல் விட்டுப்போகும் பொருள்களையும் எண்ணிப் பார்த்தால் சர்க்காரே தரும் புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தாலேயேகூட, சர்க்காரில் சரியானபடி கொள்முதல் செய்யாத குறையாகும், போக்குவரத்து, உணவுப் பொருள் பாதுகாப்பு, நடுவில் ஏற்படும் சேதம் போன்றவைகளின் அளவுப் பெருக்கு பற்றிய கவனக்குறைவு ஆகியவைகளேதான், உணவுத் தட்டிற் குத் தடங்கல்கள் என்பது புலப்படாமற் போகு

மென்று நினைக்கமுடியாத நிலையில்தானே நம்மை நிறுத்துகின்றது?

ஏன் இந்த நிலை! இழிநிலை! இல்லாத நிலை, எல்லாம் இருந்தும்! என்ற கேள்விக் குறிகள், மக்களின் மன வேதனைக் குரல்கள், விம்முதல்கள் ஆளவந்தாரை நோக்கி கிளம்பிய வண்ணம் நாடு குமுறிக்கொண் டிருக்கிறது.

கிடைக்கின்ற குறைந்த அளவு உணவாவது உருப் படியானதாக, உபயோகிக்கத் தகுதியுள்ளதாக இருக் கிறதா? இல்லையே!

மந்திரிகளே! மக்களின் பிரதிநிதிகள் என்று மார் நிமிர்ந்து உலவிடும் மாணிக்கவேலர்களே! மகான் என்றும், மாமுனிவர் என்றும் போற்றப்படும் ஆச்சாரி யார் அவர்களே! மனதில் எண்ணிப் பார்த்து, ஒரு முறையல்ல, ஓராயிரம் முறை எண்ணி யெண்ணிப் பார்த்து நெஞ்சார இதனை மறுத்திடத் துணிவுஉண்டா? வருமா? வருவீர்களா? ஏன் மாட்டீர்கள்?

மிட்டாவும், மிராசும் வீசிய வசீகர வலையிலே சிக்கி, பண்ணை முதலாளிமாரின் பக்குவ மொழிகளிலே பாசமும் பற்றுதலும் கொண்டு, தேர்தல் காலங்களிலே பணக்காரர்கள் செய்த பயனுள்ள பக்கத்துணையை நினைத்து, கிடைத்த பதவியை எப்படியேனும் காப் பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், எதையும், ஏழை மக்களின் அழுகுரல் எதையுமே சரிவர, தீர, ஆரஅமர ஆலோசிப்பதாகத் தெரியவில்

லேயே, என்று நாட்டினரின் ஓட்டால் நாட்டையாண்டி டும் நாடாள்வோரைக் கேட்டிடக்கூடாதா? கூறுங்கள் மனந் துணிந்து! குற்றமா? ஏன் குற்றம், எது, எப்படிக் குற்றம்?

பசி பசி என்று புசித்திட ஏதுமின்றி, கிடைத்திடும் உணவும் உதவாக்கரையாகவே கண்டிடும் மக்கள் குரல் உங்கள் செவிகளிலே கேட்டிட வேண்டும் என்ற விருப்பத்தால் நல்ல விளைவுகள், அதனால் ஏற்படுத்தும் எண்ணத்தால் கிளம்பிடும் கேள்விகள், கேள்விக் குறிகள் இவை யென்பதை நன்றாக எண்ணிட வேண்டுகிறேன்.

நாட்டின் இன்றைய நிலை என்ன? நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ்கின்றனரா? ஏன் இல்லை? எதனால்?

நாட்டின் நாலா பக்கங்களிலும் வேலையற்ற கைத்தறியாளரின் கண்ணீர்ப் பெருவெள்ளம் கட்டுக்கடங்காது கரை புரண்டோடுகிறது!

மது விலக்கினால் வேலையற்று வாடுவோர் ஒரு பக்கம்; மழையின்றித் தவித்து மானத்தைப் பார்த்து மானத்திற்கஞ்சி உயிர் வாதைப்படும் பண்ணையாட்களின் பரிதாபக் கூட்டம் மற்றோர் பக்கம்,

வேலை செய்தும் வேண்டிய வசதி, உழைப்புக்கேற்ற ஊதியமின்றி வாடிடும் ஆலைத் தொழிலாளர், இன்னும் மற்ற தொழிலாளர்கள்! இடையே இப்படியுமின்றி அப்படியுமின்றி, ஏழையுமில்லாது பணக்காரனுமில்லாது ஏதோ மாதா மாதம் சிறுசிறு அளவில்,

ஆனால் ஒரே குறிப்பிட்ட, கட்டுப்பட்ட அளவில் வருவாயைப் பெற்று வாழ்ந்திடும் நடுத்தர வகுப்பாரின் நைந்த நிலை!

இப்படித்தானே நாடு இன்று வாடிக் காடாகிக்கொண் டிருக்கிறது, பெரும் பகுதி, இந்த மாகாணத்தின் பெரும்பகுதி, பெரும்பாலோர் வாழ்வா வாழ்கிறார்கள்? இல்லையே!

வாழவில்லை, வளமான வாழ்வு வேண்டாம், உயிரைப் பிடித்து வைத்துக்கொண் டிருக்கும் அளவிற்காவது தன்மானத்தோடு வாழ்ந்திட வழியிருக்கிறதா?

வாழ்வுச் சுழலில் வகைகெட்டு, வக்கின்றி, வழியின்றி, வாடி வதங்கி, தேங்கித் தவித்திடும் மக்களின் மண்டையிலே மலை உருண்டு விழுந்தது போன்ற திடீர்ச் செய்தி ஒன்று, ஆம், தோழர்களே! ஆம்! திடுக்கிடும் செய்தியொன்று, தேள் கொட்டியது போன்று, தவித்திடச் செய்திடும் செய்தியொன்று வந்தது ஆளவந்தாரின் உத்தரவு என்று!

பங்கீடு—உணவுப் பங்கீடு என்ற அருமையான முறை, திட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டது, எடுக்கப்பட்டு விட்டது, தேவையற்றது என்று தள்ளப்பட்டு விட்டது!

எதனால்? ஏன்? நாட்டிலே உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகிவிட்டதா திடீரென்று? அல்ல, அல்ல! பின் எதனால்?

நாட்டிலே பங்கீடு தேவையில்லை என்று கூறிடும் அளவிற்கு மக்களின் மனநிலையும், மண்வளமும் வளர்ந்து பண்பட்டு, ஒழுங்குமுறை கட்டுப்பட்டு விட்டதா?

இனி விலை ஏருதா? வீணுக முடங்காதா, விளை பொருள்கள்? என்றெல்லாம் யோசித்து, முடிவு கட்டிய தின் விளைவால் விளைந்த நல்ல முடிவா பங்கீடு ஒழிப்பு?

இதெல்லம் காரணமல்ல, காரணமாகக் காட்டப் படவில்லை, கூறப்படவுமில்லை!

எல்லாம் பகவான்மீது பாரத்தைப் போட்டு பாராளும் ஆச்சாரியார் செய்த வேலை; திடீர்த்திரு விளை யாடல்! திருப்பணி!

பகவான்மீது பாரத்தைப் போட்டு உணவுப் பங்கீடு முறையை ஒழித்துவிட்டேன் என்று ஆச்சாரி யார் அறிவித்தார்.

பங்கீடு முறையைப் பற்றி ஓயாத, ஒழியாத, தீராத, தீர்க்கமுடியாதென்று நினைத்திடும் அளவிற்கு குறைகளும், குற்றங்களும், ஊழல்களும் முறையே தவருனதால் அல்ல, முறையை நிறைவேற்றி, முடியாத முறையற்ற முறைகளைப் பற்றிப் பலரும் பேசி, கண்டித்துக் காட்டிக் கேட்டிடத் துணிந்துவிட் டனர், என்ற எண்ணமா? பயமா? கையாலாகா கோழை யின் செயலா? எது உண்மையான காரணம் பங்கீடு ஒழிப்பிற்கு!

பகவான்மீது பாரமாம், பங்கீடு ஒழிப்பிற்கு!

பங்கீடு—இருப்பவனிட மிருந்து, அவனுக்கும் தேவையானதை, எல்லோரையும்போல் எண்ணி, நடத்திப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, விலை கொடுத்து சர்க்காரே விளை பொருள்களை வாங்கி, நேரடியாக மக்களுக்கு, நியாய விலைக்குப் பங்கிட்டுத் தரும், நல்ல நேர்மையான நாகரிகமுமான முறை இன்று தேவையற்றது, என்று நிலைமையின் தெளிவால் அல்ல, நிர்வாகக் குறைபாட்டால், கோளாறால், நாட்டிலே, நாட்டு மக்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பை, மனச் சங்கடத்தின்மூலம் வெளியிடப்பட்ட மனக்குறையைத் தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, தவிர்த்திடும் எண்ணமே இல்லாத காரணந்தான் என்று மக்கள் கேட்க மாட்டார்களா, மீண்டும் முன்னைய பஞ்சநிலை, பரிதவிக்கும் அதிக விலைப் பளுவின் சுமையைத் தாங்காது தவித்திடும் போது?

எண்ணிப் பாராது எடுத்து விட்டனரே, பங்கீடு முறையை! அடுத்த கணத்திலிருந்து விலை, உணவுப் பொருள்களின் விலை ஏறிட வில்லையா? ஏன் மவுனம்?

'நல்ல அரிசிக்கு அதிக விலை தரத்தானே வேண்டும்' என்று குதர்க்கம் வேறு பேசப்படுகிறது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சிடுவது போல!

நல்ல அரிசி, இப்போது மட்டும் எங்கிருந்து வந்தது? எங்கே யிருந்தது, இத்தனை நாளாய் நாடாள்வோரின், நல்ல நிர்வாகத்தின்போது நாற்ற மெடுத்தவைகளாகவே தரப்பட்டனவே? ஏன்? என்று மக்கள் கேட்கி

ருர்களே! இதற்குத்தானு, பகவான் மீது பாரத்தைப் போடுகிறீர்கள்!

பகவான்! பாரத்தைத் தாங்கிட பகவான் இருக்கிருராம். பொறுத்துக் கொள்ள வேண்டுமாம்!

அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி, அனுபவம், படிப்பு, பட்டம், பாராளு மன்றம், ஆட்சி மன்றம், அதிலே அலங்கார ஆசனத்தில் அமர்ந்து ஆயிரக்கணக்கில் மக்கட் பணத்தை மாதா மாதம் சம்பளமாகப் பெற்றிடும் மந்திரிகள், அவரது அலுவலகப் பொறுப்பாளர் என்ற நிலையிலே ஜனநாயகப்படி நடப்பதாகப் பேசிடும் நாகரிக சர்க்காரின் முதல்வருக்கு இதுதான் சரியான காரணப் பட்டதா?

'கண்ணன் காட்டிய வழி' என்று கண்மூடிப் பஜனை செய்துகொண் டிருக்கலாமே, ஜனநாயகம் பேசி, மந்திரி பதவி வகிப்பதைவிட!

பஜனை மடம் போதுமே, இத்தகைய உபதேசம் செய்திட! படித்து பட்டம் பெற்று, மந்திரி பதவியேற்று, மக்கள் குறை தீர, பகவான் மீது பாரம், பாவம் என்று பேசிடுவது நல்லதா? யோசித்துப் பார்க்க வேண்டும் கேள்விகள், கேள்விக் குறிகள் நம்மை நாமே கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்ல, நாட்டினரின் நல்லறிவைத் தொட்டிடும் கேள்விகள் கேட்டு அதற்கான விடைகள் பெற்ருக வேண்டும்!

கேள்விகள் கேட்டிடும் நேரத்திலே, நெஞ்சம் திடுக்கிடும் நினைவுகள் வந்து நம்மை வாட்டத்தான் செய்கின்றன.

நாட்டிலே பட்டினிப் பட்டாளங்களைக் கட்டிக் காத்திடக் கஞ்சித் தொட்டிகள் ஒரு பக்கம் திறக்கப் படுகிறது, ஆட்சியாளர்களால்!

அதே நேரத்தில், நல்ல அரிசி வேண்டுமா! விலை அதிகம் கொடுத்து வாங்கிக் கொள், புழுத்த அரிசி வேண்டுமா? போ ரேஷன் கடைக்கு என்று நேரடியாகக் கூறுது, சுற்றி வளைத்துத் திட்டமிட்டுக் கட்டுப் பட்டுக் கிடக்கும் முறைதானே, நிலைதானே, பங்கீடு ஒழிக்கப்பட்ட பின்னர், மக்களின் நிலை!

ஏன் பதினாறு அவுன்சு கொடுக்கக் கூடாது, கொள் முதல் சரிவரச் செய்யுங்கள், மிட்டா, மிராசு, பண்ணை முதலாளி பக்கம் சாய்ந்து, சரிந்து, குனிந்து கொடுக்காதே என்றெல்லாம் மக்கள் எழுப்பிய குரலுக்குப் பதில் நடவடிக்கையா? இது பங்கீடு ஒழிப்பு?

'என்னைக் கேட்காதே, எனக்கேன் இந்தத் தொல்லை, எக்கேடாவது கெட்டுப்போ,' என்று வேலையின்றி, வாடி வழி, வகையின்றி வாடுவோருக்குத் தரும் நிவாரணமா? நாசத்திற்கான நயவஞ்சகத் திட்டமா?

பகட்டாக, பணக்காரராக வாழ்வோருக்குத்தானே வசதி, இதனால்?

ஏழை எங்கே போவான், அதிக விலைக்கு அரிசி வாங்க!

பகவான்மீது பாரம் போடும் பேச்சு, எந்தக் காரணத்தால் உள்ளெண்ணத்தால் பேசப்படுகிறது என்று கேள்வி, கேள்விக் குறி போட்டுப் பாருங்கள் !

கேள்வி, கேள்விக் குறி, கிளப்பிடும் புதுப் புது பிரச்சினைகளும், எண்ணங்களும், பதில்களும் மக்களின் உள்ளங்களைத் திறந்து காட்டிட உதவும் என்று நம்புகிறேன்!

# கேள்விக் குறி!

கேள்விக்குறி! கேள்விக்குறி! நண்பர்களே, கேள்விக்குறி!

மனித வாழ்வில் மகத்தான மாறுதலை உண்டாக்கிடும் அறிகுறியாகும் கேள்விக்குறி!

எதையும் எண்ணிப் பார்த்திட - ஏன், எதனுல், எப்படி என்று ஆராய்ந்து தெரிந்திட, புரிந்திட கேள்விக்குறி போட்டுத்தானே தீரவேண்டியிருக்கிறது!

கேள்வி கேட்டிடும் வாய்ப்போ, வசதியோ, தெளிவோ, அதைவிடத் துணிவோ இல்லாவிடின், எதைத்தான் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும், புரிந்து கொள்ளவும் முடியும்?

'காலையில் எழுந்திரு! காலைக் கடன்களை முடி! கடவுளைப் பாடு பக்தியோடு!' என்று கூறியதும் கண்ணை மூடிக்கொண்டு பணிந்து வந்த காலம் மாறிதான் விட்டது! ஏன் என்று கேள்விக்குறி கிளம்புகிறது பகுத்தறிவாளரிடமிருந்து!

பகுத்தறிவாளரிடமிருந்து கிளம்பிடும் கேள்விக்குறி காலையில் எழுந்திருப்பது பற்றியுமல்ல, காலைக் கடன்களை முடிப்பது பற்றியுமல்ல. கடவுள் என்றதுமே, கடவுள் என்றுல் என்ன? யாரெல்லாம் கடவுள்?

எது கடவுள்? யார் கடவுள்? எதனுல்? எதற்காக? ஏன்? என்பது பற்றியதாகத்தான் இருக்கும்; இருக்கிறது.

காலத்துக்கும் கருத்துக்கும், நன்மைக்கும் நடைமுறைக்கும் ஒத்துவரும் எந்தவிதப் பொருள், போக்கு பற்றிய பொருளற்ற கேள்விகள் கிளம்பிடாது பகுத்தறிவாளர்களிடமிருந்து காலேயிலே எழுந்திருப்பது, காலேக் கடன்களேக் கருத்தோடு முடித்திடுவது, தொடர்ந்து தனது கடமைகளேச் செய்வது முதலியனவெல்லாம் மனித வாழ்வில் மிகமிக முக்கிய, ஆனுல் மிகவும் சாதாரணமாக இருக்கவேண்டிய நித்ய நடைமுறை நிகழ்ச்சிகளாகும்.

அறிவு வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் அன்ருட வாழ்வுப் பிரச்னேக்கும் ஏற்ற, தேவையான, தெளிந்த தினசரி நிகழ்ச்சிகளேக்கூட மனிதன் கடமைக்காக அல்ல, கடனுக்காக, கடவுளின் கடாட்சத்துக்காக என்று கட்டுப்பட்டுச் செய்திட வேண்டிய கட்டுப்பாடற்ற கடமை உணர்ச்சி உள்ளவனுக காட்சியளிக்கின்ருனே, கடவுளே கதியென்று நம்பி இருக்கிற காரணத்தால்! ஏன்? ஏன் என்று எண்ணிடும் நேரத்திலே எண்ணற்ற கேள்விக் குறிகள் எங்கள் உள்ளங்களில் தாண்டவமாடத்தான் செய்கின்றன. எண்ணற்ற கேள்விக் குறிகள் தாண்டவமாடுகின்றனவே, தோன்றுகின்றனவே என்போன்ருரின் எண்ணத்திலே மட்டுமல்ல, என்போன்ருரின் எண்ணத்திற்கு எதிரிடையான எண்ணங்களிலே ஊறித் திளேத்திடுவோரின் எண்ணங்களிலேயும் தான் ஏற்படுகின்றன.

கேள்விக்குறி! குழந்தை உள்ளத்திலே கிளம்பத் தவறக் காணோம். குறுநடை பழகிடும் சிறுவனிடமும் தோன்றிடத்தான் செய்கிறது. புரியாத, தெரியாத எதைக் கண்டாலும் குழந்தையுள்ளம் மட்டுமல்ல, குமரர், கிழவர், அறிஞர், ஆராய்ச்சியாளர் அனைவருமே அதைப்பற்றிய விவரங்களை, விளக்கங்களைத் தெரிந்து கொள்ள தம்மைத்தான் கேட்டுக்கொள்ளுகின்றனர். அது என்ன? அவை என்ன என்று.

அது என்ன, அவை என்ன என்ற அளவிலே ஆரம்பித்த கேள்விக் குறி, அடிப்படைக் கேள்விக் குறி, அது ஏன் அப்படி இருக்கிறது? அவை ஏன் அப்படி இருக்கிறது? என்ற முறையில் கேள்விக் குறிகளை அடுக்கிக்கொண்டே போகின்றனர் அவரவர்கள் நிலைமைக்குஏற்றபடி, அறிவுக் கேற்றபடி, அனுபவத்துக்கு ஏற்றபடி.

கேள்விக்குறிகள்! அவரவர் நினைப்பிற்குள்ளேயே கேட்கப்பட்டு, நினைவுச் சுழலிலே நீந்தி விளையாடி, நிம்மதியான, நிச்சயமான, நேர்மையுமான விடைகள், விளக்கந் தந்திடும் விடைகள், கிடைத்திடாது கலங்கிக் குழம்பிடும் நேரத்திலே, மக்கள் மன நிம்மதிக்காக, மன அமைதிக்காக, எண்ணத் தெளிவிற்காக எவரையும் தேடியோடிப் பிடித்து நிறுத்தி, வேண்டித் தமது கேள்விக்குறிகளுக்கேற்ற தெரிந்த விடைகளை, விளக்கங்களைத் தேடித் திரிகின்றனர். சில நேரங்களில் விளக்கங்கட்கும் ஏற்ற புதுப்புது கேள்விக் குறிகளை யாவது கேட்டுத் தெரிந்துகொள்ளத் துடிக்கின்றனர்!

கேள்வி! கேள்விக்குறி! சிந்தனையின் அறிகுறி! அறிவின், ஆராய்ச்சியின் ஆரம்ப அத்தியாயம், முதல் கட்டம், முன்னேற்றப் பாதையின் முதல் எல்லைக் கோடு! எண்ணத் தெளிவின் ஏணிப்படி! விளக்கத்திற் கான விவாதத்தின் விடிவெள்ளி!

கேள்வி! கேள்விக்குறி! ஏன்? எதனால்? எப்படி? எதற்காக? என்ற கேள்விகள் மனிதனது சிந்தனையைக் கிளறி, தூண்டி, எதையும் ஆராய்ந்திடச் செய்து, அதன் பலனை அடைந்திடப் பயன்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மைதானே!

ஏன்? எதற்காக! என்பன போன்ற கேள்விகள் கேட்டிடும் எண்ணமே தோன்றாமலிருந்துவிட்டால், எண்ணந்தான் வளருமா? வளரமுடியுமா? எண்ணம் மட்டுமல்ல, மனிதனது இன்றைய வளமான வாழ்க்கை நிலை முன்னேறிதான் இருக்குமா?

முடியாது! எண்ணத்தைக் கட்டுப்படுத்தி, கேள்வி கள் கேட்டிடும் பண்பும் பட்டுப் போயிருப்பின், ஏன், இன்றுகூடப் பட்டுப் போய்விடின் மனித வாழ்வு வசதியும் வளமும் பலவிதங்களிலே இயற்கை வளத் தைப் பண்படுத்தி யுண்பதும், உடுப்பது மட்டுமல்ல, இயற்கைச் சக்திகளையே திரட்டித் தேக்கி, தேவையான நேரத்தில், வழியில், வகையில் செலுத்தி மனித உழைப்பை, உடலுழைப்பின் அலுப்பை, ஆயாசத் தைப் பெருமளவு குறைத்துக் கொள்ளவும் முடியாது, முடியவே முடியாது!

கேள்வியின்றி, கேள்விகள் கேட்டுப் பெறும் கேள்வி ஞானமின்றி, கேள்விகள் கிளப்பிடும் புதுப்புது பிரச்சினைகளின்றி, பிரச்சினைப் பற்றிப் பேசி, படித்து, ஆராய்ந்து பெற்றிடும் படிப்பினை பாடம், தெளிவு மின்றி, மனித மனம் எதையும் சரிவரச் செய்திடும் ஆற்றலை, மனவலியை, மனவளத்தை யடைந்திட முடியாது என்பது உறுதி.

மனவலிமை, மனவளம் மனிதனை மனிதனாக, மிருக வாழ்வினின்றும், காட்டுத்தனமான கண்மூடி வாழ்க்கையினின்றும் பிரித்து, பண்படுத்தி, பக்குவப் படுத்திப் பலருடன் பழகும் பழக்கத்தையும், வழக்கத் தையும், தான் வாழ, பிறரும் வாழ வாழ்ந்திடும் வள மான, வாழ்க்கையின் இலட்சியத்தைக் கொண்டு வாழ்ந்திடும் நிலையிலே, நினைப்பிலே, நடைமுறை யிலே செலுத்தி, கட்டுப்படுத்தி, கண்ணிய வாழ்வு, களங்கமற்ற காலவேகத்தோடு கடுகி முன்னேறிய முன்னேற்ற வாழ்வு, விஞ்ஞான வாழ்வு, வாழ்விக்கும் வாழ்வு, நல்ல வாழ்வு, நாகரிக வாழ்வு வாழ்ந்திட வழி காட்டி, நிலைநாட்டுகிறது.

கேள்வி கேட்பது குற்றமென்று கருதப்படும் நாடு இது. ஒரு வகையில் மட்டுமல்ல, பலப்பல வகைகளி லும்.

சிறுவன், வீதியிலே நடந்து செல்லுகிறான், தந்தை யோடு!

வழியிலே, பலவிதமான வடிவும், வண்ண நிறங்களும், சிறிதும் பெரிதுமான மோட்டார்களைக் காண்கிறான்?

'என்னப்பா அது,' சிறுவனின் கேள்வி!

'சீ, வாடா சும்மா!' என்று சிடு சிடுத்துச் சீறி விழுவார், சில பெற்றோர்கள்.

வேறு சிலர், 'மோட்டார், உனக்கென்னத்துக்கடா இதெல்லாம்,' என்று சலித்துக் கொள்வார். தமது ஏழ்மை வாழ்வை யெண்ணி மனம் குன்றி யிருக்கும் நேரத்தில்.

மற்றும் பலர், 'மோட்டார்கார், பார். என்ன ஜோரா யிருக்கு என்பார்கள்.

சிறுவன் சற்று சுறுசுறுப்பும், சூட்சும புத்தியும் படைத்தவனாக இருப்பின், 'கார் எப்படிப் போவுது, என்று கேட்பான்'

இக்கேள்விக்குப் பொறுமையோடு பதில் சொல்ல முடியாதது மட்டுமல்ல, பெரும்பாலான பெற்றோர்களுக்கே பதில் தெரியாத கேள்வியு மாகும்.

பதில் தெரிந்து கொள்ளும் எண்ணமோ, எண்ணிப் பார்த்திடும் நிலையோ, நினைப்போ, இல்லாத சூழ்நிலை அவர்கட்கு என்று எண்ணிக்கிடப்பது தவிர வேறென்ன காரணம் இதற்கு?

'பெட்ரோல்ல போவுதடா, வாடா, சும்மா, வண்டி மேலே ஏறிடப் போவுது. என்று அதட்டிக் கை பிடித்துச் செல்வார் வேகமாக!

'பெட்ரோல்னு என்னுப்பா, எப்படிப்பா இருக்கும். எப்படிப் போவுதுப்பா!' என்று மேலும் சிறுவனது சிந்தனையி லிருந்து கேள்விகளை கிளப்பிக் குழப்பிக் கொண்டே யிருக்கும்.

'ஏம்பா, எனக்கும் கார் வேணும்ப்பா. என்று குழந்தை கொஞ்சும், கொஞ்சும், சிறிது தயங்கிப் பயந்தபடி!

'மூதேவி நீ வாழற லட்சணத்துக் கார் வேறயா' என்று முதுகில் அறையும் அறையுடன் சிறுவனது எண்ணத்திலிருந்து கிளம்பிய கேள்விக் குறிகள் கலைக் கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும்?

சில பல, வசதியும் வளமான வாழ்க்கைத் தரமும் கொண்டவர்களின் வீட்டுப் பிள்ளைகட்கு, மோட்டா ரைட்' பற்றிய செய்திகள் மட்டுமல்ல, மாதிரி மோட் டார்களுங்கூட விளையாட்டுக் கருவிகளாகக் கிடைத் திருக்கிற காட்சியையும் நாம் காணுதிருக்கவில்லை!

இதிலே நாம் கவனிக்கவேண்டியது; முக்கியமாகக் கூர்ந்து, ஆராய்ந்திட வேண்டிய நிலை, நினைப்பு உள் ளடங்கி யிருக்கிறது!

சாதாரண மோட்டார் பற்றித் தெரியாதவர். அது எப்படி உண்டானது, யார் கண்டு பிடித்தது, எப்படிப் போகிறது என்பன போன்ற செய்திகள் தெரியாதது

மட்டுமல்ல, புரியாத நிலேயுங்கூட இந்த நாட்டிலே இருந்திருக்கிறது!

இதை யொளித்துப் பயனில்லே, பலனில்லே!

படித்தவர்களிலுங்கூடப் பலருக்கு, இதெல்லாம், தெரிந்து கொள்ள வேண்டியவையல்ல, என்று ஒதுக்கப்படுகின்றன!

வாழ்க்கையிலே இது போன்று, வாழ்க்கைப் பொருள்களேப் பற்றி மட்டுமல்ல, ஆண்டவன், அரசன், நண்பன், தாய், தந்தை, உற்ருர், உறவினர், பொதுப் பணி, பூசல், கலகம், சண்டை, சமாதானம் எதைப் பற்றியுமே, 'ஏனே தானே' வென்று தாங்கள் மட்டு மல்ல, தமது வழி வழி வந்து வாழ்த்திப்போகும் தமது சந்ததிகட்குமே தேவையற்றவை, ஆராய்ந்திடக் கூடா தவை யென்று மனம்போன போக்கில், செக்கு மாட்டு வாழ்வு வாழ்கின்றனர்.

செக்குமாட்டு வாழ்வு, கண்மூடிக் கொண்டேனும், தாள நடை போட்டேனும், தன்னுலே சுற்றிச் சுற்றி வந்துகொண்டே யிருக்கும் செக்கு மாடுகளேப் போல, தான் உண்டு, தனக்கென்று ஏதோ கிடைத்த வேலே யுண்டு, கிடைத்திடும் கஞ்சியோ, சோருே உண்டு இடையே ஏதோ ஒரு சிறிது தெரிந்த, அத்தையோ, பாட்டியோ, பாட்டனே பாடிப் பாடிக் கேட்டுப் பழ கிப்போன பழைய பிள்ளேயார் தோத்திரம், இரண் டொரு தேவார, திருவாசகம், இல்லேயேல் திருப்புகழ், அருட்பா முதலிய சில பாடல்களேத் தன்னிஷ்டப்படி முனகித் தெய்வத்தைத் துதித்துப் போகிற கதிக்குப்

புண்ணியந் தேடுவது போன்ற சாதாரண, ஆனால் மிக மிகச் சத்தற்ற. சுவையேதுமற்ற வாழ்வு, மனித வாழ்வு தான். ஆனால் செக்கு மாட்டு வாழ்வு வாழ்கின்றதைக் காணவில்லையா நாம்?

விஞ்ஞானமும், விஞ்ஞான வளர்ச்சியும் விரிந்து, வளர்ந்து மனித வாழ்வுக்கான எல்லாவித ஏற்றத்தையும், எழில் நிறைந்த எண்ணற்ற பொருள்களையும் உண்டாக்கிடும் இந்தக் காலத்திலே, இந்த நாட்டில் இத்தகைய செக்குமாட்டு மனம் படைத்த மனிதர்கள் இருந்திடுவானேன்?

இவ்வுலகில் வாழ்கின்றனர் வாழவேண்டும் என்பதற்காக உழைத்து, உண்டு, உறங்கி, பெண்டு பிள்ளைகளைப் பெற்றுக் குடும்பத்தையும் வேறு நடத்துகின்றனர், மனித உருவில்!

மனிதனுக்கென்று, உள்ள அறிவை, பகுத்தறிவை, கேள்விகள் கேட்டுக் கேட்டு, அதற்கான விடைகளைக் கண்டு, பிறரிடம் கேட்டு ஆராய்ந்து, முன்னேறிடும் மனமற்ற மனிதர்களாகவே, பலர், மிகப் பலர், இருப்பது ஏன்?

ஏன்? ஏன்? ஏன்? எதனால் இத்தகைய, மனம், மனித மனம், செயலற்ற, சிந்தனைத் தெளிவற்ற சுழலும், உழலும் செக்குமாட்டு மனித மனம் மக்களிடையே சர்வ சாதாரணமாகப் பதிந்து, பழகி, ஊறிப் போயிருக்கிறது? நாகரிக வாழ்விலே அவர்கட்குச் சுவையில்லையா?

நாட்டு மக்களின் கூட்டுக் காரியங்களிலே, முயற்சி களிலே ஏன் கலந்து கொள்வதில்லை, பலர் பல மக்கள்!

வாழ்விலே அத்தகைய சோகம், சோகம் மட்டு மல்ல, சோகமாகவே வாழ்ந்தால் நல்லது, நிம்மதி, இருக்கிற நிம்மதியான வாழ்வாவது கெட்டுப் போகாது தங்கும், இப்பிறப்பில் இல்லாவிட்டாலும் அப்பிறப்பி லாவது (மறு பிறப்பிலாவது) நல்ல கதியடைவோம் என்று தம்மைத்தாமே தற்குறிகளாக, தன்மானமற்றவ ராக, ஏன் சில பல நேரங்களில் தாழாவெட்டிகளாகக் கூட ஆக்கிக் கொள்கின்றனர்.

பிறரது முன்னேற்றத்தைப் பார்த்துப் பெரு மூச்சு விடுவதோடு சரி பலரின் நிலை!

தமது தாழ்வுக்குக் காரணம் தமது அறியாமை என்று உணரவே மறுத்து, 'தமது தலைவிதி' என்று கூறிக்கொள்கிறார்களே மக்கள், அது ஏன்?

'தலைவிதி யாரைவிட்டது! அரிச்சந்திர மகாராஜனே கஷ்டப்பட்டானே! மகாராஜன் மயானத்திலே பட்ட பாடு கொஞ்சமா! மகனை, மனைவியைக்கூட விற்றுவிட் டானே!' என்று தலைவிதியை எண்ணிப் பயந்திருக்கிறார் களே, அந்தத் தலைவிதிதான் என்ன?

ஏன், தலைவிதி பலரையும் பாழ்படுத்திச் சீரழித்துப் படாத பாடு படுத்துகிறது?

'தலைவிதி' என்றால் என்ன? தலைவிதித் தத்து வத்தை, அதன் கோர விளையாட்டை, விளைவை விளக்கப் பெரும் பெரும் புராணங்களும், புண்ணிய

கதைகளுமல்லவா வருகின்றன, மக்களின் எண்ணத்திலிருந்தும், பேச்சிலிருந்தும்!

சக்கரவர்த்தியாக வாழ்ந்த அரிச்சந்திரன் பட்ட பாடு, ஆண்டவனின் சோதனையால் என்றுதானே புராணம் கூறுகிறது?

ஆண்டவனின் சோதனைதானா தலைவிதி?

ஆம்! என்று பலர் பதில் கூறுவர், மிகவும் தெரிந்தவர் போல!

ஆம்! இந்த நாட்டிலே கண்முன் காணும் காட்சியையும், எளிதில், அல்லது கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் புரிந்திடும் அல்லது புரிந்துகொள்ளக்கூடிய கருத்துக்களையும் பற்றி மக்கள் எண்ணுவதில்லை, ஏன் என்று கேட்பதுமில்லை அக்கரையோடு!

ஆனால் காணாத காட்சிகளையும், கற்பனைச் சொர்க்க வாழ்வு - பயங்கர நரகவாதை - புரியாத அதல சுதல பாதாளலோகங்கள்,யானைமுகன்,ஆறுமுகன்,காளி,மாரியம்மா முதலிய பலபல உலகங்களைப் பற்றியும், ஆண்டவரின் ஆதி—அந்தம், ஆடல் - பாடல், ஊடல்-கூடல் திருவிளையாடல் பற்றியுமே பெரிதும் அக்கரையோடு மட்டுமல்ல, அவசியம் என்ற எண்ணத்தோடு பேசப்படுகிறது, படிக்கப்படுகிறது, பாடப்படுறது, ஆடல், பாடல், சினிமா முதலிய யாவற்றிலும் ஊட்டப்படுகிறது!

பாமர மக்களில் பலர், பாமர மக்கள் மட்டுமல்ல, மக்களில் மிகமிகப் பெரும்பாலோர், இத்தகைய

எண்ண உலகத்திலே, யாரோ, என்றோ கூறிச் சென்ற மாய உலகத்தைப் பற்றிய, உன்னதமான கடவுள் களைப் பற்றிய, கண்ட கண்ட கதைகளைப் பற்றிய கனவுமல்ல, நினைத்து நினைத்து உருகி, உருக்குலைந்து போகின்றனர் வாழ்வில், உலக வாழ்வில்!

கடவுளையும், கடவுள் கதைகளையும் எண்ணி உருகியுருகிக் காலத்தை, கருத்தைச் சரிவர பயன்படுத் தாது, பிறரின் போதனைகளையே கேட்டுக் கேட்டு பழைய முறை, பழைய பாட்டு, பழைய ஆசாரம், புராதனம், புராணம், புராணத்தில் சொன்னது என்று புராணத்தின்பால் பற்று, பாசம் பரிவு ஏன் போதையுங் கொண்டு புதுமைக்கும், புத்தறிவிற்கும், புது வாழ்விற் கும், பொது வாழ்விற்குமே பயன்படாத, பயன்படவும் விரும்பாத, பகுத்தறிவிருந்தும், பகுத்தறிவிழந்து, கண்மூடி வாழ்வு, ஆனால் போதையிலே - பழையப் போதையிலே - புராணகால ஆச்சார அனுஷ்டான மென்று கூறிடும், புகட்டிடும், பரிவு காட்டிடும் புரா ணப் போதையிலே புரண்டு புரண்டு, உருண்டுஉருண்டு உடல் மட்டுமல்ல, உள்ளம், உணர்வு யாவுமே கறை பட்ட, காயம்பட்ட கவலைக்கிடமான நிலையிலே நிலை தவறி கிடக்கின்றனர்!

மனித வாழ்வு பற்றியே கவலைப்படாத, கவலைப் பட மனமுமற்ற மக்களிடையே மோட்டார் மட்டு மல்ல, ஆகாயவிமானமே சென்றால்கூட ஏதோ ஆரம் பத்தில் வாய்பிளந்து நிற்பர். பின்னர், 'இது என்ன பிரமாதம், குபேரனது புஷ்பக விமானமும், இராம

னேறிச் சென்ற அனுமந்தாழ்வாரையும்விட மேலான வையோ! அவர்கள் ஆண்டவன் அவதாரங்கள், அவ தாரங்களின் அடிமைகள்' என்று மனத்திருப்தி யடைப வர்களாகத்தானே இருக்கின்றனர்.

எங்கிருந்து கிளம்பும், கேள்வி, கேள்விக் குறிகள்; விஞ்ஞான உலகுபற்றி, விதவித வாழ்க்கை வசதிகள் பற்றி, பொது உரிமை, பொது உடைமை என்ற பொது வாழ்வில் பேசப்படும் பொருள் பொதிந்த வார்த்தை களைப் பற்றி.

கேள்விகள் கேட்டிடும் நிலைக்கு, இவரெல்லாம், இத்தகைய மனிதர் எல்லாம், செக்குமாட்டு மனம் படைத்த மனிதர் எல்லாம் மாற்றப்பட வேண்டாமா? என்பதே என்போன்றோரின் கேள்வி! கேள்விக் குறி!

மனிதர் எல்லோரும் மனிதராக, உருவிலே மட்டு மல்ல, உணவு, உடையிலே மாத்திரமல்ல, உள்ளம், உணர்வு, எண்ணம், எண்ணத் தெளிவு, மன வலிமை, மனவளம் எதிலும் எல்லாவற்றிலுமே மனிதனாகவே வாழ்ந்தால்தானே, மனிதர் மனிதராக, வாழ முடியும்?

மனிதன், மனிதத் தன்மையி னின்றும் மேம்பட்டு, மேலான கதிக்கு, சொர்க்கலோக சுகவாழ்விற்குப் போக விரும்பி, மனிதத் தன்மைகளை, மனிதனாக இருந்து, உண்டு, உடுத்தி, உறங்கி, உலவிடும் நிலையிலேயே மறந்து, மயக்க வாழ்வு, மாயா வாழ்வு, மருள் வாழ்வு, போதை வாழ்வு வாழ்ந்திடுவது நல்லதா? பொதுவில், பொது வாழ்வில், மனித இனத்தின் நல் வாழ்விற்கு என்றுதான் கேட்கிறேன்?

இத்தகையாளர், தங்களை மட்டுமல்ல, தம்மினத்த வரையே தம்முடன், தமது வழியில், பாதையில்—போதையில் உடன் வரவேண்டுமென்று விரும்புவது மட்டுமல்ல, விடாப் பிடியாகத் தொடர்ந்து தொடர்ந்துப் பேசி போதித்து, பார் பார் நாகம் பார் என்று மருட்டி, மிரட்டி, அதே நேரத்தில், அலங்கார, ஆயாச மற்ற, ஆடலழகிகள் நிறைந்த இந்திர சபையையும் கற்பக விருக்ஷம், காமதேனு போன்றவைக் காட்டி இன்பச் சுவையேற்றிப் போதை யூட்டித் தம்முடன் மயங்கியேனும் வந்தாக வேண்டும் என்று எதையும் செய்கின்றனரே!

இதற்காப் பழைய பாடல்கள்—புராணங்கள் பெரிதும் செல்வாக்குடன் கையாளப் படுகின்றன!

புராணங்கள்—அவைகளால் என்ன பலன்? பயன்? என்ற கேள்விகள், கேள்விக் குறிகள் எம்மை அதிகம் கேட்டிடச் செய்கின்றன இன்றைய ஆட்சியாளரின் போக்கும், அவரைத் தாங்கி நிற்கும், பணக்காரர்களையும், பண்டார சன்னதிகளின் போக்கும், பேச்சும்!

---

# புராணப் போதை!

பஜனேயும் பஜகோவிந்தம் பாடிக்கொண்டு இருக்கும்படிக் கூறிக்கொண்டு காலங் கடத்திடும் நிலேயிலே நாடாளும் முதல் அமைச்சர் ஆச்சாரியார் பங்கிடு முறையை ஒழித்தார், பகவான் மீது பாரத்தைப் போட்டு! அதன் விளைவால் என்ன பலன், பயன் என்று பார்த்தோம்.

'பங்கிடு' ஒழிக்கப் படுகிறது பகவான் சொன்னூர், ஒழித்து விட்டேன், என்கிருர் ஒரு சமயம்.

'பங்கீடு ஒழிப்பு' தோல்வியுற்ருல், என் வேலையை விடுகிறேன் என்றும் பேசுகிருர் ஆச்சாரியார்.

எப்படியோ, பகவானேயும், பகவானேப் போற்றிப் புகழ் பாட, மக்களின் மனதைக் கலக்கிக் குழப்பிடப் புண்ணிய கதைகள் என்ற பெயரில், அத்தைப் பாட்டிக் கதைகள் என்ற முறையில், காவியம், ஓவியம், ஆண்டவன் காதை, அருள் வழிப்பாடல்கள் என்றும் பலப்பல உருவங்களிலே பாலப் பருவத்தி லிருந்தே, பக்தி, பாராயணம், நரகம் மோட்சம் பயம் என்ற பலப் பலகாரணங்கள் காட்டி புராண இதிகாசங்களேயும் பக்கத் துணேயாகக் குட்டிக் கதைகள் கூறிக்கொண் டிருக்கிருர் ஆச்சாரியார்.

புராணம்—ஒரு போதை! மக்களின் மயக்கத்திற்கு மன மயக்கத்திற்குக் காரணமாக விளங்குகிறது!

புராணப் போதை வழி வழியாக, பழக்க வழக்கம் ஊட்டப்பட்டு, ஊறிப் போயிருக்கிறது, மக்களின் மனதில், எண்ணத்தில்!

ஊறிப் பதிந்து போன, அந்தப் போதையை மீண்டும் மக்களிடையே, பேசிப் பேசி, பிரசாரம் செய்து ஊட்டி வருகிறுர், ஆச்சாரியார்—நாடாள வந்தவர்!

இதே நேரத்தில், மடாதிபதிகளும், இந்தப் பணியில்—புராணப் போதை யேற்றிடும் பணியில் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர்.

புராணம், புதுவாழ்வு பெற்றுப் போதை யேற்றி போதையிலே சிக்கித் தவித்திடும் நிலையில், மக்களை மனம் போனபடி யெல்லாம் ஒரு சிலர், ஆட்டிப் படைக்க வழியும் வகையும் வசதியும் செய்து கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

புராணம்—பக்திக் கதை — பரந்தாமன் திருவிளையாடல், படித்தால் புண்ணியம் — பாவம் போகும் — படிக்காவிட்டாலுங் கூட, படிப்பதைப் பக்கம் நின்று கேட்டாலே கூடப் பாவந் தீர்ந்து பரகதியில் முக்திகிட்டும் என்ற முன்னுரையுடனே, முதலில் மக்களிடையே தரப்படுகிறது; போதிக்கப் படுகிறது.

பேசாமல்படி, கேள்விக் குறியெழுப்பிடாது கேள். ஆராய்ச்சி செய்திடாது, அதன்படி நட! சந்தேகித் தாலே சங்கடம் வரும் — பகவான் மீது பாரத்தைப்

போடு—பலன் கிடைக்கும் — புராணத்தைப் புரட்டிப் பார், கேள்—எத்தனை யெத்தனை பக்திமான்கள் பாவந் தீர்ந்து புண்ணிய மெய்தி யுள்ளனர் என்று! பசப்பு வார்த்தைகளால், மயக்கப் படுகின்றனர் மக்கள்.

இந்தப் போதை தெளிந்திட நீங்கிட மக்களிட மிருந்து நீங்கிட பெரு முயற்சி செய்தாக வேண்டும்.

இதற்காக புராணங்களிடையே நாமும் சற்று உலவி வருவோம்—வாருங்கள்!

புராணங்களிடையே உலவிட அழைத்திடும் நேரத் திலேயே ஒரு எச்சரிக்கையும் விட வேண்டியவனாக இருக்கின்றேன்.

புராணங்களிடையே உலவிட நான் உங்களை அழைப்பது,

புராணங்களைப் போற்ற அல்ல, புராணங்களைத் தூற்றவுமல்ல, கண்மூடிப் பின் பற்ற அல்ல; கண்ட படிக் கேலி செய்திடவு மல்ல! புராணங்களைப் புரிந்து கொள்ள!

புராணங்கள் என்று கூறப்படும் பல்வேறு புரா ணங்கள் நாட்டிலே ஏடுகளாகவும், கவிதைகளாகவும், கதைகளாகவும், காவியங்களாகவும் ஓவியங்களாகவும் மக்களின் கண் கருத்து காட்சி, எண்ணம் எதிலும் நட மாடுகின்றன!

பெரிய புராணம், விநாயக புராணம், கருட புரா ணம், கந்த புராணம், அரிச்சந்திர புராணம், அருணாசல

புராணம், இன்னும் எது எதுவோ, எத்தனை யெத்தனை ஆண்டவன் அவதாரங்களோ அத்தனைக்கும், எல்லா ஸ்தலங்களுக்கும் ஒன்றல்ல, பலப்பல புராணங்கள், ஒன்றுக்கொன்று முரண்பட்டவை களாகக் கூடக் காணப்படுகின்றன!

கருட புராணத்திலே, மனிதர் எங்கெந்தத் தவறு களைச் செய்தால், நரகத்தில் எத்தகைய கொடூரங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்பதும், எங்கெந்த தானங்களை யார் யாருக்குச் செய்தால் அந்தரலோகத் துச் சுந்தர வாழ்வாம், சொர்க்க வாழ்வு வாழ்ந்திட முடி யும் என்ப தெல்லாம் வர்ணிக்கப்பட் டிருக்கின்றன!

பெரிய புராணத்தைப் பற்றி எவ்வளவு கூறிஞ லும் விடியாது!

மனைவியையே மகேஸ்வரனுக்குத் தானம் வழங் கிய பக்தனையும், இயற்பகை நாயனுரையும், அவ்வித மனைவித் தானங் கேட்ட தயாபரனையும் படிக்கிறோம்!

பேசும் பொற் சித்திரமாம், பிள்ளைக் கனியமுதாம், பெற்ற பிள்ளை சீராளனையே சிவனுரின் சிவவேடம் கேட்டருளியபடி, சிறுவன் சீராளனைக் கண்ட துண்ட மாக வெட்டி வேகவைத்துப் படைத்து பக்திக் போதை யில் திளைத்த சிறுத் தொண்டரைக் காண்கிறோம்!

இதனைப் படித்துப் படித்துப் பாடிப் பாடிப் பர வச மடைந்து மெய் சிலிர்த்து விதிர் விதிர்த்து வியர்த்து அங்கமெலாம் பொங்கிப் பூரித்து ஆலவாயப்பனின் அருட்சோதனையை எண்ணி யெண்ணி மகிழ்ந்தாடும்

மக்களையும், பக்தர்கள் என்ற நிலையிலே பார்க்கிறோம்! பரிதாபம்!

ஆண்டவனுக்காக என்று சேமித்து வைக்கப்பட்ட நெற்களஞ்சியத்தி லிருந்து, பஞ்ச காலத்தில் பசியால் பரதவித்த ஆண்டவனது அருட் குழந்தைகளாம் மக்கள் எடுத்துப் புசித்தனர், பிறகு, வளமான நாட்களில் திரும்பச் சேர்த்து விடலாம் என்ற எண்ணத்துடனே, என்பது கேட்டுப் பொறுது, சிவச் சொத்தைத் தின்றனர் என்பதற்காக உற்றார், உறவினர், பெண்டு பிள்ளைகளை, ஏன், பச்சை குழந்தையைக் கூட வாளால் வெட்டிச் சாய்த்துப் பக்தியின் எல்லையை (போதையை)க் காட்டிக் கடைசியில் கைலைவாசனின் கடாட்சம், பெற்ற கொலைக் கஞ்சாக் கோட்புலி நாயனாரையும் நம்மால் மறக்க முடிவதில்லையே!

கண்ணைப்பறித் தப்பின கண்ணப்பர், பேயாகி உடலம் தேய்த்து உருக் குலைந்த காரைக்காலம்மை போன்ற நாயனார்களையும், அதிக துன்பத்திற் காளாகிய அப்பரையும், சுலபத்திலே சிவனருள் பெற்ற, சுந்தரர் சம்பந்தர், மாணிக்க வாசகர் போன்றாரின் சிவத்தொண்டையும் சீர் தூக்கிப் பாராம லிருக்க முடியவில்லையே, நம்மால், நமது அறிவால் ஆராய்ச்சியால்!

விநாயக புராணத்திலே, எண்ணத் தொலையாத விளையாட்டுகள், வேடிக்கைகள், ஆண்டவரின் பிறப்புகள் பற்றி!

கந்தபுராணத்திலே வரும் ஆறுமுக அவதாரமும், அதற்காக மன்மதன் சிவனாரின்மீது ஏவிய மன்மத

பாணமும், அதனுல் எரியுண்ட மன்மதனின் சோக முடிவும், அசுரர்களை அழித்த கதையும், இன்னும் எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள் காணக்கிடக்கின்றன.

வேண்டுமென்றே நயவஞ்சகமாகத் தனது பொருளைப் பறித்துக்கொண்டு பொய்யனுக்க முயன்றதற்காக அர்த்தமற்று, அறமுமற்று கட்டுப்பட்டுக் கெட்டழிந்த அரிச்சந்திரனின் கதை யாருக்குத் தேவை, இன்னும் என்று ஏன் கேட்கக்கூடாது?

அருணுசலபுராணம்! அரனின் அடியையும், முடியையும் வராகமாகவும், அன்னமாகவும் வடிவெடுத்துக் கண்டுபிடித்து, யார் பெரியவர் என்ற வீண் விவாதத்தைத் தீர்த்துக்கொண்டனராம், காக்குங் கடவுளாம் மகாவிஷ்ணுவும், படைப்புக் கடவுளாம் பிரம்மாவும், அருணுசலம் எனப்படும் திருவண்ணுமலையில்.

படைத்தல், காத்தல் என்ற தொழிலைப் படைத்த கடவுள்களுக்கிடையே சண்டை, சச்சரவு இருவரில் யார் பெரியவர் என்பதுபற்றி! எவ்வளவு விந்தை! வேடிக்கை!

இந்த விபரீத விளையாட்டுப் போட்டியின் வெற்றி-தோல்வியைக் கண்டறிய சிவனுர் திருவண்ணுமலையிலே விசுவரூபமெடுத்து நின்றுராம்!

இந்தப் போட்டியில் அன்ன வடிவெடுத்துப் பறந்து முடியைக் காணச்சென்ற பிரமன், இடையிலே சிவனின் திருச்சடையிலேயிருந்து கீழே விழுந்தவண்ணமிருந்த தாழம்பூவைச் சாட்சியாக வைத்துப் பொய்யாக

சிவனாரின் திருமுடியைக் கண்டேன், வெற்றி கொண்டேன் விஷ்ணுவை! என்று எக்காளமிட்டுப் பின் புரட்டு வெளிப்பட்டு கைலாசபதியின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளானாராம்.

இதனால், இத்தகைய ஆண்டவன் லீலைகள் நடைபெற்றக் காரணத்தால் திருவண்ணாமலை புனித ஸ்தலமாகிவிட்டதாம்.

இப்படித்தான், ஏனோ எதற்கோ மிரண்ட கழுதை புல் சுமந்த புலைச்சியைத் துரத்த, புல்லுடன் புலைச்சி கோவிலைச் சுற்றிச் சுற்றியோட, அவளைத் தொடர்ந்து ஓடித் துரத்திய கழுதைக்கும், பயந்தோடிய புலைச்சிக்கும் மோட்ச சாம்ராஜ்யம் கிடைத்ததாக ஒரு புராணம் கூறுகிறது.

தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்த தனயனுக்கு முத்தி தந்த கதையுமிருக்கிறது திருவிளையாடற் புராணத்திலே!

திருடியேனும் பகவான்மீது பக்தி குன்றாது பூஜை செய்த திருமழிசை ஆழ்வார்களைக் காணலாம் புராணத்தில், புண்ணிய புருடர் என்ற போற்றுதலுக்கிடையே!

வேறொரு வேடிக்கையை, விசித்திரமான புராணத்திலே ஒரு நிகழ்ச்சியைப் படித்தேன்.

வெட்கித் தலைகுனிந்திட வேண்டிய அளவுக்கு அதிலே ஆபாசம் ஆண்டவர்மீது பொழியப்பட் டிருக்கின்றது!

ஆபாசக் களஞ்சியம், அர்த்தமற்ற அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், மனிதத் தன்மைக்கும் பொருந்தாத விபரீத உடல் உறவுகள், உற்சாகக் களியாட்டங்கள், கேளிக்கைக் கோலாகலங்கள்! இவைகள் தானே பெரும் பாலான புராணங்கள் என்று நாட்டிலே கூறப்படுவன! வேறென்ன!

எதற்கெடுத்தாலும், எந்த ஒரு சிறு நிகழ்ச்சிக்கும் ஒரு புராணம், பழையகதை இருக்கத்தானே இருக்கிறது இந்த நாட்டில்? மக்களின் உள்ளங்களிலே பதிந்து போதையேறிக் கிடக்கிறதே!

காக்கை கறுப்பு ஏன், அதற்கொரு புராணம்! யானைக்குத் துதிக்கை இருப்பது ஏன்? அதற்கொரு சாமிக்கதை! கடல் நீர் உப்பாக இருப்பது ஏன்? ஒரு புராணம்! அணிலின் முதுகில் மூன்று கோடுகள் இருப்பானேன், அதற்குமொரு கதை இராமனுடன் சம்மதப் படுத்தி!

அய்வேலங்காயின் விதை லிங்க வடிவமாக இருக்கிறதே! இது தெரியாதா என்று ஆரம்பித்து, பஸ்மாசுரனைப்பற்றிய கதையை ஆரம்பிப்பார்கள்!

அய்வேலங்காயின் விதை சிவலிங்க வடிவாக இருக்கிறது இதற்கு என்ன காரணம் தெரியுமா? மக்கள், பெரும் பகுதியினரானபாமரரிடையே பரவியிருக்கிறது! அதை எண்ணிப் பார்த்தாலே மிகவும் விசித்திரமாகவும், வேடிக்கையாகவுங்கூடக் காணப்படுகிறது, கடவுளின்

கண்மூடித்தனமும், கடவுள் என்ற நிலையிலே கடவுள்கள் செய்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளும்!

கேளுங்கள் அந்த வேடிக்கைக் கதையை. புராணத்தை!

பஸ்மாசுரன் என்ற ஒரு அசுரன் இருந்தானும். அசுரன் என்றால் ஈவு, இரக்கம், நல்ல நினைப்பு, நடப்பு எதையுமே செய்யாதவன் மட்டுமல்ல, செய்யவே தெரியாதவன் என்றெல்லாம் பொருள்படும் புராண, புண்ணிய ஏடுகளின் அகராதிப்படி!

அத்தகைய கொடியவன், கோர நினைவுகளிடையிலேயே நித்திய வாழ்க்கையையும், 'நடைமுறைகளும் நடத்தி வரும் பொல்லாதவன் பரமசிவனை நோக்கித் தவம் செய்தானும்.

தவம்! சாதாரண தவமல்ல! சர்வேசுரனின் மனதைக் குளிர வைத்து அவன் முன் தோன்றிக் காட்சியளித்திடும் நிலைமைக்குக் கைலாசபதியைக் கொண்டு வந்த கடுந்தவம் புரிந்தானும்.

பஸ்மாசுரனின் தவத்திற்குத் தலைவணங்க வேண்டிய அளவு அவனது தவம் தூய்மை உள்ளதாக இருந்தது என்பதுதானே, தயாபரன் அந்த அரக்கனுக்குக் காட்சி யளித்தமைக்குப் பொருள்; விளக்கம்!

எப்படியோ, பஸ்மாசுரனுடைய தவத்தின் மகிமையால், மேன்மையால் காணற்கரிய கடவுள், கைலை நாதன், சிவபெருமான் அவன் முன் தோன்றினர்.

பஸ்மாசுரனைப் பார்த்து, 'அப்பா, உன் தவத்திற்கு மகிழ்ந்தோம். என்ன வரம் வேண்டும், கேள்; தந்தோம்' என்ருர்.

உடன் பஸ்மாசுரன், 'ஐயனே, எவருடைய தலை மீது நான் கை வைத்தாலும் அவர்களெல்லாம் அப்படியே பஸ்பமாகிவிட வேண்டும், எரிந்துவிடவேண்டும்' என்று கேட்டதும், 'தந்தேன். தந்தேன்' என்று சிவனுர் வரமருளிவிட்டார்.

அசுரன் அகமகிழ்ந்தான். அடுத்த கணம், 'தங்கள் வரத்தின் மகிமையை முதலில் தங்கள் தலைமீதே கை வைத்துப் பரிட்சித்துப் பார்க்கிறேன்' என்று சிவனுரின் தலைமீது கைவைத்து அவரையே பஸ்பமாக்கி எரித்து விட ஓடி வந்தானும்.

எல்லாம் வல்ல எம்பெருமான் என்ன செய்தார்? எதிர்த்து நிற்கவில்லை, ஏனடா இந்த அக்கிரமம் என்று கேட்டுக்கொண் டிருக்கவில்லை, தலை தப்பினுல் போதும் என்று ஓட்டமெடுத்தாராம்!

அசுரன் துரத்துகிருன், துரத்துகிருன் சிவனுரை! துரத்தித்துரத்திச் சிவபெருமானை விடாது தொடர்ந்து பிடித்திட ஓடுகிருன்.

சிவனுர் திக்கெட்டும் ஓடியோடி அலுத்துவிடுகிருர். ஓடவே முடியவில்லை. ஓடிவருபவனே விட்டபாடில்லை, அவரைத் தேடித் துரத்துவதை! நின்ருல் நெருப்பாகி வெந்து நீருகிவிடுவோம், அவன் தலைமீது

கைவைத்தால், என்ற கவலை! என்ன செய்வார் சிவ லிங்கனார்.

திரும்பிப் பார்த்தார். அருகே அய்வேலங்கொடி காய்த்துக் குலுங்கிக்கொண் டிருந்ததைக் கண்டார். ஓடி அய்வேலங்காயினுள் ஒடுங்கி அடங்கி ஒளித்துக் கொண்டாராம், அசுரனிடமிருந்து தப்ப, தன்னுயிரைத் தீ தழுவாதிருக்க! சிவபெருமான் ஒளிந்து கொண்டது மட்டுமல்ல, சிவனார் காக்குங் கடவுளாகிய மகா விஷ்ணுவை நினைத்து, தாம் உடனே விஷ்ணு சிவனாரின் சிக்கலான நிலையைச் சீர்படுத்திட மோகினி உருவங் கொண்டு சிவனைத் தேடியலைந்த பஸ்மாசுரன் முன் தோன்றினாராம்.

மோகினி! அசுரனை மயக்கி, அவனை மடிய வைத்து, சிவனாரை வாழவைக்க விஷ்ணு மோகினி வடிவு பூண்டார். மோகினிப் பெண்ணாகவே மாறிவிட்டார்.

மோகினியைக் கண்டதும் பஸ்மாசுரன் மையல் கொண்டான். மோகினியும் இசைவதுபோல் நடித்தாள். அசுரன் நெருங்கும் நேரத்திலே, தூர விலகி, 'குளித்து விட்டுவா!' என்று அனுப்பினாள் மோகினி!

அசுரன் குளிக்கச் சென்றான். இதற்குமுன் மோகினியான விஷ்ணு தமது சக்தியால் எங்கும் ஆறு, கிணறு, குளம், குட்டை எதிலுமே நீரில்லாது வறண்டு போகும்படி செய்துவிட்டார்.

குளிக்கச் சென்ற அசுரன் நீரில்லை என்று திரும்பி வந்தானும்.

மோகினி, கொஞ்சம் ஈரத்தோடு கூடிய சேற்றை யாவது தலையில் தெளித்துக்கொண்டு வா என்று அனுப்பினுள்.

திரும்பச் சென்ற அசுரன் மோகினியின் விருப்பப் படி ஒரு குளத்தில் சிறிது சேறும் சகதியுமான நீர் இருந்ததைப் பார்த்தான்.

பார்த்தவுடன், பாவைமீது கொண்ட பாசத்தால், போதையால், தான்செய்வதை மறந்து, அதன் விளைவை மறந்து சேற்று நீரை மொண்டு தன் தலையில் தடவினுன்.

சிவனுரிடம் மீளாத தவம் செய்து பெற்ற வரத் தின் மகிமைப்படி பஸ்மாசுரனின் தலைமீது அவன் கை பட்டதும் எரிந்து பஸ்பமாகிவிட்டான்.

அசுரன் ஒழிந்தான்! மாபாவி மடிந்தான்; மகா விஷ்ணுவின் மாயாஜாலத்தால், மோகினி வடிவைக் கண்ட மயக்கத்தால்!

அய்வேலங்காயிலிருந்து சிவனை வெளியே வரும் படி செய்தார் விஷ்ணு, அரக்கன் அழிந்ததை எடுத்துக் கூறி!

வெளி வந்த சிவன் விஷ்ணுவின் மோகினி வடி வைக் கண்டு மோகித்து, விஷ்ணுவான மோகினியைப் புணர்ந்தாராம் என்று மேலும் புராணம் போய்க் கொண்டே யிருக்கிறது.

சிவன் ஓடி ஒளிந்த காலம் முதற்கொண்டு அய்வேலங்காயின் விதை சிவலிங்க உருவில் இருக்கிறது

என்று மக்கள் நம்பி, அதன்மேல் குறிப்பிட்ட கடவுள் கதையை, புராணத்தை புராணப் புத்தகத்திலும், புராண பிரசங்கங்களிலும், நாடகம், சினிமா முதலிய எல்லாவற்றிலுமாகக் கண்டு, கேட்டு மறக்காமலிருக்கின்றனர்; மறக்க முடியாது செய்யப்படுகின்றனர்.

சிவனின் திருவுள்ளம் திருப்தி பெறும் அளவுக்குத் தவ வலிமை படைத்தவன், திடீரென்று தீயோனாக வரம் கொடுத்த கடவுளையே கொல்லத் துணிவானா?

போகட்டும். சிவனால், சர்வேசுரனால், சர்வவல்லமை படைத்தவனால், வரமருளும் வல்லமை படைத்தவனால் தீயோனின் தீக்குணத்தைத் திருத்த முடியவில்லையா?

சிறு கொடியின் காய்க்குள்ளே ஒளிந்துகொள்ளும் சக்தி படைத்த கடவுள், திக்கெட்டும் சுற்றிப் பயந்து ஓடுவானேன், அசுரனிடம் அகப்படாதிருக்க!

திரிபுரமெரித்த சிவனின் சக்திக்கே இழுக்கல்லவா இது!

எல்லாவற்றையும், விஷ்ணுவின் பெண்ணுருவைக் கண்டு பயந்து ஒளிந்து வெளிவந்த சிவன் மோகங் கொண்டு காமாந்தகாரனாகி புணர்ந்தாராமே புண்ணிய புராணப்படி! அடுக்குமா இந்தச் செய்கை, ஆண்டவனுக்கு?

அநாகரிகமல்லவா, ஆணான விஷ்ணுவை, தன்னைப் போன்ற கடவுளை, தன்னைக் காப்பாற்ற பெண்ணுருவான விஷ்ணுவை கண்டதும் கருத்தழிந்து,

காமக் குரங்காட்டமாடியது கடவுளின் கண்ணியத் திற்குப் புறம்பானதுதானே!

இந்த ஆணுக்கும் ஆணுக்கும், அதாவது சிவனுக் கும், மோகினி வடிவெடுத்த விஷ்ணுவுக்கும் பிறந்த வரும் ஒரு கடவுளாகிவிடுகிருர்! புராணம் பறை சாற்று கிறதே!

இதுமட்டுமா? பெண்ணுக்கு ஏன் மீசையில்லை, தாடியில்லை? எப்போதிருந்து இல்லை? இதற்கும் ஒரு புராணம் இருக்கிறது.

இதைத்தான் குறிப்பிட்டேன், வெட்கித் தலை குனிய வேண்டிய அளவுக்கு ஆபாசம் ஆண்டவர்மீது! ஏன்? தேவாதி தேவர்கள்மீதும், முற்றும் துறந்த முனி வர்கள்மீதும் பொழியப்பட் டிருக்கிறது என்றேன்.

மாண்டவ்யர் ஒரு முனிவர். முனிவர் என்ருல் துறந்தவர்தானே!

அவரும் மணம் செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்த விரும்பினுராம். மனதிற்குகந்த மங்கையை உல கெங்கும் தேடியும் கிட்டாது, வீட்டிலிருந்த தன் வித வைத் தங்கையே தகுதி வாய்ந்தவள் என்று மனைவி யாக்கிக் கொண்டார்.

தங்கையை, விதவையான தங்கையையே தாரமாக் கிக் கொண்ட முனிவருக்குப் பெண் குழந்தை யொன் றும் பிறந்து வளர்த்து பருவ மங்கையு மானுள்!

பெண் பெரியவளான நேரத்திலே, முனிவரும் அவரது மனைவியும், உலக யாத்திரை புறப்பட்டனர்.

புறப்படுமுன், தமது மகளை யாரிடம் ஒப்படைத்துச் சென்றால் நலம்; நன்மை! கற்பு கெடாது, களங்கமற்று இருப்பாள், இருக்க முடியும், இருக்க விடுவர், என்று யோசித்தனர்!

சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர், முருகர், தேவேந்திரன், முப்பத்து முக்கோடி தேவர்கள், முதலிய எவருமே சரியில்லை, ஒவ்வொருவரும் தவறுகள், பெண் விஷயத்தில் செய்திருக்கின்றனர், நம்ப முடியாதவர்கள் நங்கையை விட்டுச் செல்ல, என்று, நினைத்துப் பார்த்து நீக்கி விட்டனராம்.

சிவன் உமையை உடலின் ஒரு பாதியாகவும், கங்கையைத் தலையிலும், அதே நேரத்தில் மோகினி வடிவத்தி லிருந்த விஷ்ணும் விட வில்லையே என்பது அவர்கள் நினைவிற்கு வந்திருக்கும்!

விஷ்ணுவின் பல அவதாரங்களும், குறிப்பாக கிருஷ்ணுவதாரத்தில் நடத்திய கோலாகலங்களை மறக்க முடியாதிருந் திருக்கலாம் அவர்கள்.

இதைவிட, விஷ்ணு பிருந்தை என்ற முனிவரின் பத்தினியை அவளது கணவன் உருக்கொண்டு கற்பழித்தும், அவள் அதனால் மாண்டு போனதும், பிறகும் காமந்தணியாத விஷ்ணு, அவளது பிணம் எரிந்து குவிந்த சாம்பலிலே புரண்டு, கடைசியாக, சாம்பலிலே முளைத்த துளசிச் செடியாக மாலையாக அணிந்த பின்

னரே சுயநினைவிற்கு வந்தா ரென்று புராண நிகழ்ச்சி, அவர்களை எச்சரித்திருக்கும்.

இது போலவே, அகலிகையை, இந்திரன் கெடுத்த தும், தெய்வயானையுடன், வள்ளியைத் தேடிக்கொண்ட முருகனையும், தேவ தாசிகளுடன் கூடிக் குலவிடும் தேவாதி தேவர்களையும் நினைத்து ஒதுக்கி விட்டனர் போலும், மாண்டவ்யரும், அவரது தங்கையாகப் பிறந்து தாரமாகி விட்ட மங்கையும், தமது மகளின் பாதுகாப்புக்கு, இவர்கள் எவருமே ஏற்றவரல்ல, என்று.

இறுதியாக இவர்கள், எமதருமனே, ஏற்றவன் என்று, எம தருமராஜனிடம், தமது மகளை ஒப் படைத்து, கற்பு கெடாது காப்பாற்றி, தாம் திரும்பி வரும்போது ஒப்படைக்க வேண்டுமென விட்டுச் சென்றனராம், உலக யாத்திரை போகு முன்.

எமதருமனும், பாரதப்படி குந்தி தேவியைப் புணர்ந்து, பீமனைப் பெற்றவன் என்பதை எப்படித் தான் மறந்தார்களோ, இவர்கள்.

தங்கை அண்ணனையும், அண்ணன் தங்கையையும் மணந்து கொண்டவர்கள் தானே, இவர்களும்!

எம தருமனிடம், விடப்பட்ட, மங்கையை எமதரு மன், வெளியிலே யிருந்தால், எப்பிடியாவது, எவராது, பருவ மங்கையைப் பாழ்படுத்திக் கெடுத்து விடுவர், என்று பயந்து,அவளை வாயால் விழுங்கி,தனது வயிற்றி

லேயே பத்திரமாகப் பாதுகாத்து வந்தானும், எவருக்கும் தெரியாமல், எவருடைய கண்ணிலுமே படாமல்!

நாட்கள் செல்லச் செல்ல, எம தருமனுக்குச் சபலம் மேலோங்கி வந்தது. ஒரு நாள் இரவு வயிற்றிலிருந்து, பருவ மங்கையை வெளியே எடுத்து, சரசமாடினான்! சரியென்று, முனிவரது மகளும் கூடிக்குலவி மகிழ்ந்தனராம்.

பகலிலே வயிற்றிலும், இரவிலே எம தருமனுடன் படுக்கையிலே கூடிக்குலவி காமக் களியாட்ட மாடுவதுமாக, முனிவரது மகள், காலம் கடத்தி வந்தாள்.

ஒருநாள், எமதருமன் சோலையிலே, முனிவரது மகளை, வெளியே எடுத்து, மண்டபத்திலே விட்டுவிட்டு நீராடச் சென்றான்.

மண்டபத்திலே, மங்கை தனித்திருந்தாள். பருவத்தின் பூரிப்பும், புதுப்பெண்ணின் புது விளையாட்டால் பூரித்த அங்க அழகும் அவ்வழியே சென்ற அக்கினி பகவானின் கண்களையும் கருத்தையும் கவர்ந்து காமவெறி யூட்டி விட்டதாம்.

அக்கினி பகவான், தன்னுடன் வந்த தனது நண்பன் வாயு பகவானின் உதவியை நாட, வாயு பகவான், அந்தச் சோலையிலே வசந்தத் தென்றலை வீசினாராம்.

தென்றல், கோலமலர்கள் மீது வீசி, மலரின் மணத்துடன் தென்றல் பருவ மங்கையின் மனதிலே மயக்கத்தையும் உடலிலே உற்சாகத்தையும், உணர்விலே போதையு மேற்றியதாம்.

இத்தருணம் பார்த்து அக்கினி அவளை நாடத் தொட, தொட்டதும் அவள் துவள, அக்கினி அணைக்க, அவள் மேலும் மேலும் இறுகி அணைத்து முத்த மழை பொழிந்திட காமக் களியாட்டம் தொடங்கி விட்டதாம். தம்மை மறந்திருந்த இருவரும் எமதருமன் வரும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டனர். முனிவரது மகள் உடனே எமனைப் போல அக்கினி பகவானை வாயில் போட்டு விழுங்கி வயிற்றிலே பத்திரப்படுத்தி விட்டாளாம்.

வழக்கம் போல எமதருமர், பருவக்குமரியை வயிற்றுக் கனுப்பி, வீடு சென்று இரவு வெளியிலே எடுத்து வழக்கமான லீலைகளை நடத்தி விடிந்ததும் வழக்கப்படி வயிற்றுக் கனுப்பி விட்டான்.

பகலில், எமன் வயிற்றி லிருந்த முனிவரின் மோகன மங்கையால் சும்மா கிடக்க முடியவில்லை!

தனது வயிற்றி லிருந்த அக்கினியை வெளியிலெடுத்து, எமனின் வயிறையே காமக்கள மாக்கிக் கலவியின்ப மனுபவித்தாளாம், அக்கினியுடன்.

பகலில் அக்னியுடன், சுகபோகம், இரவே எமதருமனும், கூடிக் குலவுதல் இப்படியே அவள் இன்ப உலகில் நடந்தாள்.

அக்னி, அழகு மங்கையின் அடி வயிற்றிலே அடைபட்டுக் கிடந்ததால் மூவுலகிலும் அக்னியின்றி அனைவரும், தீராத தொல்லைகளுக்கு ஆளாயினராம்.

மூவரும் தேவரும்,முனிவரும் அனைவரும் அக்கினி யைக் கண்டு பிடிக்க முனைந்தனர். எவராலும் முடிய வில்லை, அக்கினியை அழைத்து வர! எப்படி முடியும்?

பார்த்தார் வாயு பகவான் உடனே எமனை உட்பட யாவருக்கும் விருந்து ஏற்பாடு செய்தாராம். எமதரும னுக்குப் பக்கத்திலே அதிகப்படியாக இரண்டு இலைகள் போடப்பட்டது. 'யாருக்கு' எமன் கேட்டதும், உன் வயிற்றி லிருக்கும் பெண்ணை வெளி யிட்டால் சரியா கும், என எமன் பயந்து பெண்ணை வெளியில் விட்டா னும்.

வாயு பகவான் 'பெண்ணே, உன் வயிற்றி லிருக் கும் அக்கினியை அனுப்பு வெளியே', என்றதும் அக் கினி பயந்து பயந்து வெளியே வந்தாராம்.

அக்கினி அலறிப் பயந்து பெண்ணின் வயிற்றி லிருந்து வெளி வரும்போது, அந்த மங்கையின் மீசை யும், தாடியும் அக்கினிச் சுவாலையால் அடியோடு கருகிப் போயினவாம்.

அன்று முதல் பெண் இனத்திற்கே மீசையும் தாடி யும் அடியோடு அற்றுப் போயின என்று ஒரு புராணக் கதை மக்களிடையே உலவி வருகிறது! எவ்வளவு வேடிக்கை!

இதிலே, இந்தப் புராணக் கதையிலே எத்தனை ஆபாசம், ஆண்டவன் எனப்படுவோரின் அர்த்தமற்ற ஆபாச நடத்தைகள் இருக்கின்றன.

இத்தனையும் ஆண்டவன் லீலைகள் என்று பக்தி யோடு படிக்கப் படுகிறது.

பாரதத்திலே வரும் பாஞ்சாலி, பத்தினிப் பெண் கள் வரிசையிலே சேர்க்கப் படுகிறாள். தகுமா? முறையா? பொருத்தமா? யோசியுங்கள்!

ஐவருக்குந்தேவி, அழியாத பத்தினி, ஐந்து பேருக் குத் தேவியானவள், ஐந்து புருடருக்கு மனைவியான வள் எப்படி பத்தினியாவாள்?

ஐவர் மட்டுமா? ஆறாவதாக, கர்னன் மீதும் நெஞ்சைப் பறி கொடுத்திருந்தாளாமே, அந்த அழி யாத பத்தினி, பாஞ்சாலி!

பாரதத்திலே வரும் மாம்பழச் சருக்கத்திலே, மரத்தி லிருந்து கீழே வீழ்த்தப்பட்ட மாம்பழத்தை மீண்டும் மரத்திலே ஒட்ட வைக்கக் கண்ணன் காட்டிய வழிப்படி, பாண்டவரும் துரோபதையும் தமது மன தின் ரகசியத்தைக் கூறும்போது வெளி யிட்டாளே, பாஞ்சாலி, கர்ணன் மீது எனக்குக் காதல் மயக்கம் உண்டு என்று. எப்படி ஏற்பது, கற்புக்கரசி என்று பாஞ்சாலியை? முடியாதே!

புராணங்கள் — புண்ணிய கதைகள் — பக்திக்கும் முக்திக்கும் வழி காட்டிடும் தூய ஏடுகள் என்று கூறப் படுபவைகளி லிருந்து ஒரு சிலவற்றை—மாண்டவ்யர் கதையையும்—பெண்களின் கற்புக்கு எடுத்துக் காட் டெனக் கூறப்படும் பாரதப் பாஞ்சாலி பற்றியும் கூறி யதே இவ்வளவு வெட்கக் கேடாகக் காணப்படுகிறதே,

இவற்றைப் படிப்பதாலோ, கேட்பதாலோ மக்கள் அடையும் பயன்தான் என்ன? என்ன? என்று ஏன் கேட்கக்கூடாது.

புராணங்களைக் கண்மூடிப் படித்து, கேட்டு, அவற்றிலே காணப்படும், கூறப்படும் அசாதாரண நிகழ்ச்சிகளையும், மனித சக்திக்குப் புறம்பான அதிசயங்களையும் ஆபாச நிகழ்ச்சிகளையும் ஆண்டவன், அவதாரம், அருள் வழி கடவுள் கடாட்சம் என்று நம்பி, அதே போதையில், மக்கள் மயங்கி, மனபல மிழந்து, தமது சக்தியால், தன்னுழைப்பால், தனது சிந்தனையால் முன்னேருது, தான் இருக்கும் நிலையை, தரித்திர நிலையை உயர்த்திக் கொள்ள, 'பிரார்த்தனை, பக்தி-பாராயணம் ஆகியவற்றிலேயே ஈடுபட்டுச் சோம்பேறி யாகிருர்கள்!

சோம்பேறியாவது மட்டுமல்ல, கையிலிருக்கும் காசையும், காலத்தையும், ஏன், கருத்தைக் கூடக் கடவுள் வழிபாட்டிற்கும், யாத்திரைக்கும், பூஜைக்குமே செலவழித்துக் கொண்டு, சத்தற்ற வாழ்வுச் சுமையை சுமக்க முடியாது சுமந்து போகிற கதியை நினைத்துக் கொண்டு 'சாவே வா, சாவே வா,' என்ற வாழ்க்கை நடத்துகின்றனரே! இந்த நிலையை, மாற்றி யமைத்திட வேண்டாமா?

மக்கள், மக்களாக, எதையோ நினைத்துக் கொண்டு ஏங்கி, எதிர் பார்த்துப் பார்த்து ஏமாந்தவர்க ளாகவே வாழ்ந்திடும் வாழ்வை மாற்றி, வளப்படுத்திட வேண்டாமா?

இதை யெல்லாம் செய்தாக வேண்டும், மறுத்துக் கூறத் துணிவுள்ளவர், நேரடியாகக் கூறிவிடட்டும்! அவர்கள் வரமாட்டார்கள்.

எனவே, திராவிட வாலிபர்களே, இனப்பற்று மிக்க இளைஞர்களே, உங்களைத்தான் கேட்கிறேன், நாட்டை மீட்டிட வேண்டுமானால், நாட்டினரின் நினைவிலிருந்து நச்சு எண்ணங்களைப் போக்குங்கள் முதலில்.

புராணப் போதை! ஒழிக்கப்பட வேண்டும், புத்தறிவுப் போதனை மூலம், புதுயுகக் கருத்துக்கள் மக்களிடையே பூத்துக் குலுங்குவதின் மூலம்!

இதற்கான பகுத்தறிவுப் படை — பாசறை — தி. மு. க. வுடன் ஒத்துழைத்து—போதை நீங்கிய நீக்கப்பட்ட திராவிட நாட்டைக் காண, எழுச்சி முரசொலி முழங்கட்டும்.

## கலைஞர். கருணாநிதியின் அரிய நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தூக்குமேடை | — | 1 | 8 | 0 |
| களத்தில் கருணாநிதி | — | 1 | 0 | 0 |
| பெருமூச்சு | — | 1 | 0 | 0 |
| சுழல் விளக்கு | — | 1 | 0 | 0 |
| சிந்தனை ஆழி | — | 1 | 0 | 0 |
| இரத்தச்சவடு | — | 1 | 0 | 0 |
| புராணபோதை | — | 1 | 0 | 0 |
| பலிபீடம் நோக்கி | — | 1 | 0 | 0 |
| இனமுழக்கம் | | 1 | 0 | 0 |
| நச்சுக்கோப்பை | — | 0 | 12 | 0 |
| வாழ முடியாதவர்கள் | — | 0 | 12 | 0 |
| அறப்போர் | — | 0 | 8 | 0 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | — | 0 | 8 | 0 |
| கொலைக்களம் | — | 0 | 8 | 0 |
| பெரிய இடத்துப் பெண் | — | 0 | 8 | 0 |
| உணர்ச்சி மாலை | — | 0 | 8 | 0 |
| தப்பி விட்டார்கள் | — | 0 | 6 | 0 |

**சி. என். அண்ணாதுரை :—**

| | | | | |
|---|---|---|---|---|
| தீ பரவட்டும் | — | 1 | 0 | 0 |
| தேன் துளிகள் | — | 1 | 0 | 0 |
| புராண மதங்கள் | — | 1 | 0 | 0 |
| மறுமலர்ச்சி | — | 1 | 0 | 0 |
| குமாஸ்தாவின் பெண் | — | 1 | 0 | 0 |
| அறிஞர் அண்ணாதுரை (தொகுப்பு) | — | 1 | 0 | 0 |
| இதன் விலை ரூபாய் 3,000 | — | 0 | 12 | 0 |
| தேவ லீலைகள் | — | 0 | 8 | 0 |
| நமது முழக்கம் | — | 0 | 8 | 0 |
| அண்ணாவின் உவமைகள் | — | 0 | 8 | 0 |

**கலைமன்றம்**

**122, வரதாமுத்தியப்பன் தெரு,**

**Post Box No. 275 - சென்னை 1**